கடவுட்டுணை.

மதுரைக்கோவை.

நாகூர் - வித்வஜ்ஜன சேகரராகிய

ம-ள-ள-ஸ்ரீ

குலாம்காதிறு நாவலர்

இயற்றியது.

இஃது,

இப்பிரபந்தத்தின் பாட்டுடைத்தலைவரும், ரங்கூன் பிரதான வர்த்தகரும்,

ஜன்மோகிய கனம்பொருந்திய மகாராஜராஜஸ்ரீ

பெ. மா. மதுரைப்பிள்ளை யவர்கள்

அநுமதியால்,

அச்சுப் பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்:

Madras:

PRINTED AT THE SCOTTISH PRESS,

BY GRAVES, COOKSON AND CO.

12*th November* 1888.

மதுரைக்கோவை.

காப்பு.

காவார்கருஞ்சென்னைவேட்டோரிமார்க்கண்டகாவலன்சேய்
காவார்மதுரைப்பெருமானிருதிண்குளிர்புயத்திற்
றாவார்பொருவிலகப்பொருட்கோவையைச்சூட்டுதற்கு
மாவார்பரமபொருளாங்கடவுள்வணங்குதுமே.

காப்பு-முற்றிற்று.

மதுரைக்கோவை.

முதலாவது—களவியல்.

கைக்கிளை.

கோவையென்பது, நேரினமணிகணிரைபடக் கோப்புழிக்கோவையெனப் பெயர்பெற்றாற்போல, அகப்பொருட்கிளவிகளணிபெறக் கோக்கப்படுவதாகலின், கோவையெனப் பெயர்பெற்றது. அகப்பொருளென்பதென்னையெனின்:—அகத்திணையபயனும். ஈண்டகமென்பதியாதோவெனின்:—ஒருவனுமொருத்தியுந் தம்முளொத்தவன்பினராய்க்கூடுங்கூட்டத்தின்கட்பிறந்த வின்பமென்க. என்னை "ஒப்புமுருவும் வெறுப்புமென்றா - கற்புமேருமெழிலுமென்றா - சாயலுநாணுமடனுமென்றா - நோயும் வேட்கையுநுகர்வுமென்றாங் - காவயின்வரூஉங்கிளவியெல்லா - நாட்டியமரபினெஞ்சுகொளினல்லது - காட்டலாகாப்பொருளவென்ப" என்றாராகலின், உண்மைமாத்திரையுணர்த்திப் பிழம்புணர்த்தப்படா துணர்வுநுகர்வதாயகத்தே நிகழ்தலின், அது, ஆகுபெயராயகமெனவாயிற்று. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியலென்பதற்கு நச்சினார்க்கினியாருமிவ்வாறே யுரைகூறினார். அவ்வின்பப்பொருள் ஈண்டுக் களவுகற்பென்னு மிருவகைக் கைகோளாற் பெறப்பட்டது. என்னை "அளவையின்பத் தைந்திணைமருங்கிற் - களவுகற்பென விருகைகோள்வழங்கும்" என்றாராகலின், கைகோளென்புழிக் கையென்பதொழுக்கம்; கோளென்பது கொள்ளுதல். கொள்ளுதலென்பது புடைபெயர்ச்சியையுணர்த்துந்தல் விகுதிகெட்டு, கெட்டவழி முதனீண்டு, நிறைகோட்பறையென்றாற்போல நின்றது. இதற்கிலக்கணம், தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிற்காண்க.

களவென்பது, என்னை "அன்பினைந்திணைக் களவெனப்படுவ-தந்தணருமறை மன்றலெட்டனுட் - கந்தருவவழக்க மென்மனார்புலவர்" என்றாராகலின். என்னை "அறநிலையொப்பே பொருட்கோடெய்வம் - யாழோர்கூட்ட மரும்பொருள்வினையே - யிராக்கதம்பேய்நிலை யென்றிக்கூறிய - மறையோர்மன்றலெட்டிவையவற்றுட் - டுறையமைநல்லியாழ்ப் புலமையோரியல்பிதன் - பொருளவென்மனார் புலமையோரே" என்பதான், இவ்வெண்வகை மணங்களுள் காந்தருவமணமாம். அது, இருவர் தலைவனுந்தலைவியுந் தம்முளொத்தார்பொழி லகத்தெதிர்ப்பட்டு, கொடுப்பாருமடுப்பாருமின்றி, தாமேதமியராய்ப் புணர்தலாம். ஆயின், மறையொழுக்கமன்றே, களவெனப்பெயர்கூறிய தெற்றுக்கெனின்;—இருவருங் கரந்தவுள்ளத்தராய்க் கூடுபவாகலானும், இன்னம்பலநிமித்தத்தானுமென்க. பலநிமித்தமென்பன ஈண்டு விரிப்பிற் பெருகுமாகலின், பொருணூற்களிற் காண்க.

கைக்கிளையென்பது, என்னை “மலர்தலையுலகத்துப் புலவோராய்ந்த - வருந்தமிழகப்பொருண் கைக்கிளையைந்திணை - பெருந்திணையெனவெழுபெற்றித்தாகும்” “அவற்றுள் - கைக்கிளையுடைய தொருதலைக்காமம்” “அதுவே - காமஞ்சான்ற விளமையோள்வயிற்-குறிப்பறிகாறுங் குறுகாதுநின்று - குறிப்படுநெஞ்சொடு கூறலாகும்” என்பனவற்றானுணர்க. கைக்கிளையென்புழிக் கையென்பதுசிறுமை; கிளையென்பதுறவு. ஆயின், கைக்கிளையென்பது, புறத்தைச்சார்ந்ததன்றே, ஐந்திணைக்கண்முதல் வைக்கப்பட்ட தென்னையோவெனின்;—அது, அகத்தைச்சார்ந்த புறமாகலானும், என்னை “மெய்க்கிளையாமேழார் வேண்டும்புணர்ச்சிமுன் - கைக்கிளை நிகழ்தற் கடனெனமொழிப” என்றாராகலானும் வழுவமைதியாமுன்வைக்கப்பட்டதென்க. அதூஉம், என்னை “காட்சியையந் துணிவுகுறிப்பறிவெனா - மாட்சிநான்கு வகைத்தே கைக்கிளை” என்றாராகலின், நான்குவகைப்படும். அந்நான்கனுண் முதலாவது:—

காட்சி.

என்பது, என்னை “புணர்ப்பதும்பிரிப்பது மாகியபால்களுட் - புணர்க்கும்பாலிற் பொருவிறந்தொத்த-கறைவேற்காளையுங் கன்னியுங்காண்ப - விறையோனுயரினுங் குறைவின்றென்மனார்” என்றாராகலின், தலைமகன்றலைமகளைப் பொழிற்கட் கண்ணுற்றுக்கூறாநிற்றல். ஆயின், தலைமகன்றலைமகளென்பார் யாவரோவெனின்; இல்லதினியது நல்லதென்று புலவர் நாட்டிக்கூறப்படு மூன்றனுள், இல்லதாகிய புனைந்துரையாற்றோன்றிய, என்னை “பிறப்பேகுடிமை யாண்மையாண்டோ - டுருவநிறுத்த காமவாயி - னிறையேயருளே யுணர்வொடுதிருவென - முறையுறக்கிளந்தவொப்பினதுவகையே” என்றாராகலின், இப்பத்துவகையுமொத்த தம்முளொப்பாரு மிக்காருமில்லாரொன்றுகொள்க. “இறையோனுயரினுங் குறைவின்றென்மனார்” என்பதான், களவின்கண் தலைமகற்குப் பதினையாண்டும் பதின்றிங்களும், தலைமகட்குப் பன்னீராண்டும் பதின்றிங்களும் பருவமென்றுணர்க. இதன்விதி இறையனார் பொருட்சூத்திரவுரையிற் காண்க. இனி, தலைமகன் றலைமகளைக் கண்ணுறுமா றெங்ஙனமோவெனின்; தலைமகன் வேட்டைவிருப்பினனாய்ப் பற்பல்கூர்வேலிளைஞர்தற்சூழப்பொழிற்கட்சென்றான். தலைமகளும் விளையாட்டு விருப்பினளாய்ப் பற்பல் கண்ணுமனமுங் கவருமொண்ணுதன் மகளிர்தற்சூழச் சென்றாள். சென்றுழி, அருவியாடுதுஞ் சுனைகுடைதும் வாசமலர்கொய்து மூசலாடுதுமெனப் பலரும்பிரிபவே, சீறடிகிடந்துசிலம்புபுலம்ப மெல்லெனநடந்து, ஆண்டுநின்றதோர் புன்னைஞாங்கர் நறுமலர்கொய்துநின்றாள். நிற்புழி, பளிக்குப்பாறைமே னீலக்கலாபம்விரித்ததோர் கோலமயிலாடக்கண்டு, ஆண்டண்மித்தமியளாய் நின்றாள். நிற்புழி, தலைமகனும் ஆண்டெழுந்ததோர்கடமானின்பின்றோடிக் காவலிளைஞரிற் கையகன்று, அருவியங்கரைக்கட்பாகனைநிறீஇத் தமியனாய்ப்புக்கான். புக்குழி, வடகடலிலிட்டதோர்கழிசென்று, தென்கடலிலிட்டதோர் நுகத்துளையிற்கோத்தாற்போல, தலை

மகளைக் கண்டானென்க. இதனைவிரிப்பிற் பெருகுமாகலின், பெருநூற்க ளிற்காணக. இதற்குச் செய்யுள் :—

பூமேவுகொன்றைவடிவார்கமலம்பொலிகுவளை
மாமேவுதண்ணங்குமிகைசெவ்வாம்பல்வயங்கமுகை
தாமேவுகொம்பொன்றுசீமான்மதுரைத்தடங்கிரிசூழ்
காமேவுகற்பகம்பொற்பகமாகிடக்காண்கின்றதே.

(இதனுரை.) முகை தாம் மேவு கொம்பு ஒன்று—இருதாமரைமு கைகள் பொருந்தியவொரு கொம்பானது, பூ மேவு கொன்றை - பூக்கள் பொருந்துமோர் கொன்றைக்காயும், வடிவு ஆர் கமலம்-அழகுநிறையுமோர் தாமரைப்பூவில், பொலி-பொலிந்துதோற்றும், குவளை - இருகுவளைப்பூக் களும், மா மேவு தண் அம் குமிகை - பெருமைபொருந்திய குளிர்ந்த வ ழகிய வோரொட்பூவும், செவ்வாம்பல் - ஓர்செவ்வல்லிப்பூவும், வயங்க - தன் னிற்பிரகாசிக்கவும், சீமான் மதுரை - ஸ்ரீ மானுகிய மதுரைப் பிள்ளையின து, தடம் கிரி சூழ் - அகன்ற மலைக்கண்சூழ்ந்த, கா - காவின்கண் - மேவு கற்பகம் - அங்குப்பொருந்திய கற்பகமரமானது, பொற்பு அகம் ஆகிட- அழகிய பக்கமாகவும், காண்கின்றது - (நெஞ்சே ! என்கண்களிற்) காண கின்றது என்றவாறு.

கொன்றை, கமலம், குவளை, குமிகை, செவ்வாம்பலென்பன வாகு பெயர்கள். கமலமொழிந்த நான்குமும்மைகடொக்குநின்றன. கமலம் ஏ ழாவது தொக்கவேற்றுமைத்தொகை. வயங்க, ஆகிட வென்புழியுமும் மைகடொக்கன. ஆகவென்பது, ஆகிடவெனப் பகுதிப்பொருள் விகுதி யேற்றுநின்றது. பொலியென்பதனைக் குவளை, குமிகை, ஆம்பலென்னு மூன்றற்குங் கூட்டி, கமலத்திற் பொலிந்துதோற்றுங் குவளையுங் குமிகையு மாம்பலுமெனக் கொள்ளக்கிடத்தலின், முகையுமத்தாமரையனவென்பது பெற்றும். இரண்டென்பது தோன்றமுகைதாமென்றுர். என்னை "தா மென்கிளவி பன்மைக்குரித்தே" என்றுராகலின். ஏகாரமீற்றசை. தலை மகன், கற்பகம்பொற்பகமாகிடக் காண்கின்றதே யென்றுனுகலின், அவ னவ்வுருவைக் கற்பகமரத்தின்கீழ்க் கண்டானென்றுணர்க. இவ்வுலகின் கண்ணுங் கற்பகமரங் கூறற்பாற்றேவெனின் ; இனி யைய நிகழ்வுழிவா னரமகளோவெனவு மையம்பிறத்தல்வேண்டிப் புனைந்துரையாற் கூறப்ப ட்டதென்க. "கற்பகத்தினயலே பசும்பொற்கொடி நின்றதால்" என் றுர் பொய்யாமொழிப்புலவரும்.

இனி, கோவைக்கண் அகப்பாட்டுக்களு ளொருபாட்டுக் கேட்டக் கால், என்னை "இணையேகைகோள் கூற்றேகேட்போ - ரிடனேகாலம் பயனேமுன்ன - மெய்ப்பாடெச்சம் பொருள்வகைதுறையென் - றப்பா லாறிரண் டகப்பாட் டுறுப்பே." என்றுராகலின், இப்பன்னிரணடகப்பாட் டுறுப்பும் வரல்வேண்டுமென்ப திலக்கணமாகலின், குறிஞ்சி, பாலை, முல் லை, மருதம், நெய்தலென்னுந் திணையைந்தனுள்ளு மிப்பாட்டின் திணையா வது குறிஞ்சி. முதலுங்கருவுமுரியுமென்னு மூவகைப்பொருளானு முண

ரப்படுந் திணைகளுள், எம்முதலானு மெக்கருவானு மெவ்வுரியானு மிதுகுறிஞ்சித்திணையென் றுணரப்பட்டதோவெனின்;—தடங்கிரியென்னுமுதலானும், குவளையேயாம்பலேயென்னுங் கருவானும், புணர்தனிமித்தமென்னுமுரியானு முணரப்பட்டதென்க. குவளையுமாம்பலு மருதத்திணைக்குரிய கருவன்றே, குறிஞ்சித்திணைக்கட் கூறியதென்னையெனின்;—சுனைக்குவளையுஞ் சுனையாம்பலுமென்க. அற்றேல், முல்லைத்திணைக் கருவாகிய கொன்றையையும், மருதத்திணைக்கருவாகிய கமலத்தையுங்கூறியதென்னையோவெனின்;—என்னை "எந்நிலமருங்கிற் பூவும்புள்ளு - மந்நிலம்பொழுதொடு வாராவாயினும் - வந்தநிலத்தின் பயத்தவாகும்" எனவும், "முத்திறப்பொருளுந் தத்தந்திணையொடு - மரபின்வாராது மயங்கலுமுரிய" எனவும், "மற்றவைதம்முண் மயங்கினுமப்பெயர் - பெற்றதிணையின் பெயர்க்கொடைபெறுமே" எனவும், "ஒருதிணைக்குரியன வொருதிணைச்சேரின் - விரிநூற்புலவா விருந்தென்றனரோ" எனவுங் கூறியவாற்றானென்க. கைகோளாவது, களவுகற்பென்னு மிரண்டனுள் களவு. கூற்றாவது, கூற்றிற்குரியா ரின்ஞொன்புழித் தலைமகன்கூற்று. கேட்போராவது, கேட்டற்குரியா ரின்ஞொன்பழி நெஞ்சு. இடனாவது, பொழில். அல்லதூஉம், தன்மை, முன்னிலை, படர்க்கை யென்னு மூவிடனைக்கொண்டு, முன்னிலையென்பாருமுளர். காலமாவது, இறப்பு, நிகழ்வு, எதிர்வென்னு மூன்றனுள் நிகழ்வு. பயனாவது, காட்சிவியப்பானுள்ளமகிழ்தல். முன்னமாவது, தலைமகளைக்கண்ட தலைமகன் பொருளைக்கூறா துவமையைக்கூறல். மெய்ப்பாடாவது, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, உவகை, அச்சம், பெருமிதம், வெகுளியென்னு மெய்ப்பாடெட்டனுள், கண்டபொருளா னுளத்தே மயக்கந்தோன்றி யொன்றையொன்றாகக் கூறலின் மருட்கை. எச்சமாவது, சொல்லுங்குறிப்புமாகிய விரண்டனுள் நெஞ்சென்னுஞ்சொல். பொருள்வகையாவது, விற்பூட்டு, விதலையாப்பு, கொண்டுகூட்டு, பாசிநீக்கம், ஒருசிறைநிலையென்னு மைந்தனுள் விதலையாப்பு. பொருள்வகையைக் கோளெனினுமமையும். துறையாவது, என்னை "சொல்லியவல்ல வொன்றினுமவற்றே - டொல்லும்வகைதேர்ந் துணர்த்தியல்வழாம - னுளைப்போர்கேட்போ ருண்மையின்றி - யுளைக்குங்கவியே யுளைப்பதுதுறையே" என்றாராகலின், அது சிறுபான்மைவரப்பெறும். இரவுக்குறியிடையீட்டுழிக் "காவலர் கடுகுதல்" என்பதும், பரத்தையிற்பிரிவுழிப் "புணர்ச்சியின்மகிழ்தல்" என்பதுந் துறையாயினமை காண்க. அகப்பாட்டுறுப்புப் பனிரண்டனுள், முன்னமுந்துறையு மொழித்துப்பத்தென்றார் இறையனார். என்னை "அவற்றுள், எச்சமுங்கோளு மின்மையுமுரிய" என்றாராகலின், இவ்விரண்டுமாயினு மொன்றாயினு மின்றியும்வரும்.

அகப்பாட்டின்கண், என்னை "பாட்டுடைத்தலைவன் கிளவித்தலைவனெனப் - பாட்டினுட்பாடப் படுவோரிருவர்" என்றாராகலின், தலைமக்களிருவர்வருதலின், ஈண்டுத்தலைமகனென்பான் கிளவித்தலைவனும், மதுரையென்பான் பாட்டுடைத்தலைவனுமென்றுணர்க.

இனிவரும் பாட்டுக்கட்கு மேற்கூறிப் போந்தனவற்றைப் பொருந்துமாறுய்த்துணர்ந்துகொள்க.

இரண்டாவது :—

ஐயம்.

என்பது, என்னை "மடமானோக்கி வடிவங்கண்ட - விடமுஞ்சிறந் துழி யெய்துவதையம்" என்றாராகலின், தலைமகன்றன்னாற் காணப்பட்ட இத்துணைமேதகவுடையாள் நீரரமகள்கொல்லோ, சூரரமகள்கொல்லோ, வரையரமகள்கொல்லோ வானரமகள்கொல்லோ அன்றி, மக்களுள்ளாள் கொல்லோவென ஐயுற்றுக்கூறுநிற்றல். இதற்குச் செய்யுள் :—

சீரோவகன்றுவிளங்கியவாழிடன்றண்ணுறைதெண்
ணீரோவனமோவரையோபிறவெனினீள்விசும்போ
காரோதருவோவெனுங்கைமதுரைக்கவின்கொள்சென்னை
யூரோதெரியரிதானெஞ்சுகாண்டியிவ்வொண்டொடிக்கே.

(இ-ள்.) நெஞ்சு காண்டி - நெஞ்சமே நீ காண்பாயாக, இவ் ஒண் தொடிக்கு - இவ்வொள்ளிய தொடிகளையுடையாட்கு, சீர் ஒவகன்று விளங்கிய வாழ் இடன் - செல்வமான தொழிவுநீங்கி விளங்கவாழுமிடமானது, தண் உறை தெள் நீரோ - குளிர்ச்சிபொருந்தும் தெள்ளிய நீர்கொல்லோ, வனமோ - வனங்கொல்லோ, வரையோ - மலைகொல்லோ, பிறஎனின் - இவையல்ல பிறவென்றால், நீள் விசும்போ - நீண்டவானங்கொல்லோ, காரோ தருவோ எனும் கை மதுரை - கரிய மேகங்கொல்லோ கற்பக மரங்கொல்லோவென்று சொல்லுங் கைகளையுடைய மதுரைப்பிள்ளையினது, கவின் கொள் சென்னையூரோ - அழகுகொள்ளுஞ் சென்னபட்டணங்கொல்லோ, தெரியரிது - தெரியவரிதாயிருக்கின்றது. ஏ-று.

சீரோவகன்றுவிளங்கியவாழிடனென்பதற்கு, சீரானது விரிந்துவிளங்க வாழுமிடமெனினுமமையும். விளங்கிய வென்பதனைச் செய்திய வென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமாக்கொண்டு, இடமென்னும் பெயரொடு முடிப்பாருமுளர். மதுரையென்பது ஆறும் வேற்றுமைத்தொகை. தெரியவரிதென்பது, தொகுக்கும் வழித்தொக்கது. ஆல்அசை. நெஞ்சு அண்மைவிளி. ஒண்டொடி அன்மொழித்தொகை. ஏகாரம் ஈற்றசை.

காரோதருவோவென்னு மோகாரங்களொழிந்த வோகாரங்களைந்தும் ஐயப்பொருளினின்றன. தெரிநிலைப்பொருளில் வந்தமையான் றெரிநிலையோகாரங்களெனக் கொள்ளிற்படு மிழுக்கென்னையெனின் ;—இப் பாட்டின்கிளவி யையமாகலானும், அலங்காரமு மையமேயாகலானும், ஐயப்பொருளிற்கொள்ளாக்கா லையநிகழாதாகலானும், இவ்வோகாரங்களைய மேயென்க. எனின்;—என்னை "பிரிநிலைவினாவெதிர்மறையொழிய

சை - தெரிநிலைக்கிளவி சிறப்பொடுதொகைஇ - யிருமூன்றென்ப வோகா ரமமே" என்றாராகலின், ஐயவோகாரம் யாண்டுப்பெற்றீரெனின் ;—என் னை "மாறுகொளெச்சமும் வினாவுமையமுங் - கூறியவல்லெழுத் தியற் கையாகும்" என, எழுத்ததிகாரத் துயிர்மயங்கியலில் ஓகாரவீற்றுப்பதமு டிபுழி, ஆசிரியர் தொல்காப்பியர்தாமே யெடுத்தாளுதலானும், உரையாசிரி யர் நச்சினார்க்கினியர், பத்தோ பதினொன்றோ புற்றோபுதலோவென்று காட்டிய வுதாரணங்களானும்பெற்றாம். காரோதருவோ வென்பவுமவை.

இவ்வொண்டொடிக்கு வாழிடன் நீரோவென்றமையான் நீரரம களென்றும், வனமோவென்றமையான் சூரரமகளென்றும், வரையோ வென்றமையான் வரையரமகளென்றும், விசும்போவென்றமையான் வா னரமகளென்றும், சென்னையூரோவென்றமையான் மக்கண்மகளென்றுங் கூறினமைகாண்க. இவன் யாதுபற்றி யிங்ஙன மையுற்றானெனின்; அ ருவியங்கரையாகலான் நீரோவென்றும், மரச்செறிவாகலான் வனமோவெ ன்றும், குறிஞ்சித்திணையாகலான் வரையோவென்றும், கற்பகமரத்தின் கீழ் நிற்றலான் விசும்போவென்றும், கானிலந்தோய வுருவெளிப்பட்டுப் புவிக்கணிற்றலான் சென்னையூரோவென்று மையுற்றானென்க. இனித் துணிவு தோற்றுதற்பொருட்டே சென்னையூரோவென்பதீற்றிற் கூறப்ப

மூன்றாவது :-

துணிவு.

என்பது, என்னை, "எழுதியவல்லியுந் தொழில் புனைகலனும் - வா டியமலருங் கூடியவண்டு - நடைபயிலடியும் புடைபெயர் கண்ணு - மச் சமும் பிறவு மவன்பானிகழுங் - கச்சமிலையங் கடிவனவாகும்" என்றா ராகலின், அங்ஙன மையுற்ற தலைமகன், தலைமகளது கானிலன்றோய்தல் கருங்குழலில் வண்டுமொய்த்தல் கண்ணிமைத்தன் முதலியகுறிகளான், இவண்மக்களுள்ளாளே, தெய்வமல்லளென்று துணிவுற்றுக் கூறாநிற்றல். இதற்குச் செய்யுள் :—

துளிக்கும்புயலன்னவள்ளன்மதுரைவிண்டோய்சிலம்பிற்
களிக்கும்பமாமுலையோடன்றிறத்துக்கலங்குறுநிற்
றெளிக்கும்படியடிமாநிலன்றோய்ந்தனதேனசையா
னளிக்கும்பலுங்குழல்வாய்வீழ்ந்தனநெஞ்சணங்கலளே.

(இ-ள்.) நெஞ்சு - நெஞ்சே, துளிக்கும் புயல் அன்னவள்ளல் மதுரை - மழைபெய்யு மேகத்தையொத்த வள்ளலாகிய மதுரைப் பிள்ளை யினது, விண் தோய் சிலம்பில் - மேகந்தோயு மலையிடத்து, களி கும்பம் மா முலையோள் தன் திறத்து - செருக்கையுடைய யானை மத்தகம்போ லும் பெரியமுலைகளையுடையாளது காரணமாக, கலங்கு உறு நின் தெளிக்

கும்படி - கலங்குதலையுற்ற நின்னைத் தெளியப்பண்ணும்பொருட்டு, அடி மா நிலன் தோய்ந்தன - இவளது சிறடிகள் பெரிய பூமியிற்றோய்கின்றன. அளிகும்பலும் தேன் நசையான்குழல் வீழ்ந்தன - வண்டுக்கூட்டமு மது விருப்பினனே கூந்தலில் விழுகின்றன. அணங்கு அலள் - இவறருணிவ ளணங்கலலள் (மக்களுள்ளாளே யென்றபடி) எ - று.

எனவே, கண்ணிமைத்தனவுங் கண்ணிவாடினவுங் கொள்க. கும்பமென்பதற்குக் குடமென்பாருமுளர். நிற்றெளிக்கு மென்பழி இயல் பின்விகாரம். தெளிவிக்கு மெனற்பாலது தெளிக்குமென்ன விவ்விகுதி தொக்கு நின்றது. தோய்ந்தன, வீழ்ந்தன வென்புழி, வினைவுபற்றி நிகழ் காலத்தை யிறந்தகாலமாக் கூறினனென்க. அளிக்கும்,பலுமென்னும்மும் மைசிறப்பு. நெஞ்சு அண்மைவிளி. ஏகாரம் ஈற்றசை.

காணிலன்றோய்வதும், அளிக்கும்பல் குழல்வாய் வீழ்வதுந்தன் னெஞ்சைத் தெளிவிக்கும்பொருட்டே யெனத்தலைமகன் விதந்து கூறின மைகாண்க.

நான்காவது.

குறிப்பறிதல்.

என்பது, என்னை "அரிவை நாட்டமகத்து நிகழ்வேட்கை - தெரி யவுணர்த்துங் குறிசிறக்கென்ப" என்றாராகலின், தலைமகன் றலைமகளது வேட்கையை அவட் பார்வையான் தன்னிடத்துண்டென்று குறிப்பறியா நிற்றல். இதற்குச்செய்யுள் :—

பூக்கும்பொழில்புடைசூழ்சென்னைநாடன்புகழ்விரவத்
தேக்குந்தருமதுரையாமதுரை தன்றிண்சிலம்பிற்
றூக்குங்கவின்முலையானடைமம்மர்தனியகற்ற
நோக்கும்பனிமொழிநோக்கன்றமிழ்தினுநூங்கிதுவே.

(இ-ள்.) (நெஞ்சே!) பூக்கும் பொழில் புடைசூழ் சென்னை நாடன் - என்றும் பூக்கா நிற்கும் பொழில்கள் பக்கஞ்சூழ்ந்த சென்னபட்ட ணமென்னு நாட்டையுடையவனும், புகழ் விரவ - தன் கீர்த்தியாண்டுங் கலப்ப, தேக்கும் தருமதுரை ஆம் மதுரைதன் - நிறைக்காநிற்குந் தருமது ரையுமாகிய மதுரைப்பிள்ளையினது, திண் சிலம்பில் - திண்ணிய மலையிடத்து, தாக்கும் கவின்முலையான் அடை மம்மர் - நம்மகத்தே தாக்காநிற்கு மழகிய முலைகளான் யாமடைந்த மயக்கத்தை, தனி அகற்ற - ஒப்பற்று நீக்க, நோக்கும்பனிமொழி நோக்கு - இன்று நம்மை நோக்காநிற்கு மிந்தக் குளிர்ந்த மொழியுடையாளது பார்வையானது, அமிழ்தினும் நூங்கிது- அமுதத்தினும் பெருமையாயிருத்தலை யுடையது எ - று.

நாடனும், துறையுமென்புழி யும்மைகள் விகாரவகையாற் றொக்கன. சிலம்பிற்றாக்குங் கவின்முலையென்புழி, சிலம்பிலேதாக்கு முலைகளென விசேடிப்பாரு முளர். முலையானடையென்புழி, யானென்பதனை நானெனக்கொண்டு, முலையென்புழி மூன்றாவது விரித்துப் பொருள் கூறினாலோவெனின்; - நெஞ்சேயென்பது முன்னிலைத் தன்மையாகலின், அது பொருந்தாதென்க. பணிமெழி அன்மொழித்தொகை. அன்று அசைநிலை. அன்றென்புழி வினாவோகாரம் விரித்து, நோக்கமன்றோவெனக்கூறினு மமையும். நெஞ்சே யென்னு முன்னிலை யெச்சம் - ஏகாரம் ஈற்றிசை.

முலைகளானடைந் தமம்மனையகற்றப் பணிமொழியினது நோக்கமமிழ்தினு நூங்கிதெனவே, அவட் பார்வையான் வேட்கையுண்டென்று குறிப்பறிந்தமை காண்க. ஆயின், தலைமகள் வேட்கையாற் பார்த்தனளாதல் வேண்டும்; ஆகவே, புணர்ச்சிக்குடன்பட்டாளென்று முடியுமன்றே, புணர்ச்சிக்குடன்பட்டாளென்பது, கைக்கிளையினிலக்கணமன்றன்றோ, ஆகலின், குறிப்பறிந்தாளென்பது பொருந்துமோவெனின்; - நன்றுகடாயினாய். அவள் வேட்கையாற்பார்த்தாளல்லள், மற்றென்னையெனின்; - அவளகத்து இனி நிகழும் வேட்கையைப் பார்வையா னறிந்தானென்க. அஃதெங்ஙனமெனின்; - பசித்து வந்தானொருவன் ஒரு தக்கானைக்கண்ணுற்றக்கால், அத்தக்கான் பசித்துவந்தானை நோக்குழியந் நோக்கமவன் பசிதீர்க்குமென்றோ தீர்க்காதென்றோ பொதுவாய் நிற்கும். அதுபோல அவட்பார்வையும் பொதுவாய் நின்றது. பசித்துவந்தவன் பசிவயத்தனாகலின், அத் தக்கான் பார்வையான் சோறிடுவானென் றெண்ணுவானன்றி, இடானென்றெண்ணான். அதுபோலத் தலைமகன் அவாவயத்தனாகலின், தலைமகட் பார்வையான் வேட்கையுண்டென் றறிந்தானெனக் கொள்க. ஆயின், வேட்கைகுறிப்பறிவுமுடன்படலு மற்றியாண்டையோவெனின்; "முறுவற்குறிப்புணர்தல்" "மறுத்தெதிர்கோட" லென்பனவற்றானென் றுணர்க.

இவற்றிற் குரிய விலக்கண மனைத்தையும் விரிக்கப்புகின் வரம்பின்றிப் பெருகுமாகலின், ஒருபடியேசுருக்கி முடித்தாம். ஆகலின், வேண்டியவற்றிற்குத் தொல்காப்பியமுதலிய நூல்களிற் கண்டுகொள்க. இனி வருஞ்செய்யுட்களுக்கும் அறிவனவற்றை யுய்த்துணர்க.

கைக்கிளை முற்றிற்று.

இயற்கைப்புணர்ச்சி.

இரந்துபின்னிற்றற்கெண்ணல்.

தரந்தாயினுமிகவாயடைந்தாரைத்தழுவிநித்தம்
புரந்தாதரிக்கும்பெருமான்மதுரைப்பொலஞ்சிலம்பி
லரந்தாம்வடிக்கணையன்னவிழியோளருந்தனங்க
ளிரந்தாயினும்பெறுவாம்வருவாயினியென்னெஞ்சமே. ௫

இரந்துபின்னிலைநிற்றல்.

ஓரானையன்னவிரட்போர்க்கிலையென்றுரைக்குமுரை
சேரானையண்ணன்மதுரையங்கோன்றடந்திண்சிலம்பிற்
போரானையன்னவென்னுள்ளத்தைப்போழப்பொருமுலையா
மீரானையேவிநின்றாய்நீதியன்றணியேந்திழையே. ௬

முன்னிலையாக்கல்.

வாவியம்போதுகமழ்சென்னையூரன்மதுரையங்கோன்
மாவியம்போலச்சிலம்பனையீர்நுமர்மைவிழிக்குக்
காவியம்போதுபகைகாட்டிநிற்பதைக்கண்டுபின்னு
மோவியம்போலநின்றீரென்னைகாரணமுள்ளத்ததே. ௭

மெய்தொட்டுப்பயிறல்.

மாறப்படாதமொழியான்மதுரைமஞ்சார்சிலம்பின்
மீறப்படாமுலைநைகின்றதேரிடைநீர்மிதிக்கின்
றூறப்படாதுபழிவந்துநாளைசொன்னேனதனா
லேறப்படாதுகண்டீர்வண்டுகொளிவளீர்ங்குழலே. ௮

பொய்பாராட்டல்.

மலையைப்பொருவுபொற்றிண்டோண்மதுரைமன்னன்சிலம்பிற்
சிலையைப்பொருவுநுதலாய்தவத்திற்சிறந்ததனி
நிலையைப்பொருவறக்கொண்டாங்கொர்தாளினினிற்றனின
முலையைப்பொருவவன்றோமாமுளரிமுழுமுகையே. ௯

இடம்பெற்றுத்தழால்.

வெடிக்கின்றவிப்பிமணியேய்த்தொளிதரும்வெண்ணகையீர்
படிக்கின்றதண்டமிழ்மாறன்மதுரைப்பனிவரைவாய்ப்
பிடிக்கின்றவேல்விழிபட்டபுண்ணாறப்பிறங்கிடையை
யொடிக்கின்றகொங்கையொற்றும்பாங்கர்மாதவியொண்ணிழலே.

வழிபாடுமறுத்தல்.

கடியேகொளுந்திண்மதிட்சென்னையூரன்கருதலர்க்கோ
ரிடியேயனையவன்சிமான்மதுரையிருஞ்சிலம்பின்
முடியேயணிமுலைமாளுருக்கென்றுமென்முல்லைமலர்க்
கொடியேபெரிதுகண்டாய்நாணமென்னுங்குலவரணே. கக

இடையூறுகிளத்தல்.

மாலைக்கடந்தகொடையான்மதுரைமன்னன்சிலம்பி
னூலைப்புரையுமிடையணங்கேயென்னைநோக்கினைதென்
காலைக்கடவுகருப்புவில்லான்பொருங்காலங்கண்டோ
வேலைக்கரங்கொண்டனைமால்களிறுகள்விட்டனையே. க௨

நீடுநினைந்திரங்கல்.

இன்றேய்நறவமலர்த்தொடைமாரனெழின்மதுரைக்
குன்றேமணிமுடியோவென்னுங்கொங்கையங்கொம்பரன்னீர்
மின்றேய்வடியவிழிக்கோட்பட்டேற்கவ்விடாய்தணிய
வென்றேதருவிர்நறுந்தொண்டைத்தீங்கனியின்னறவே. க௩

மறுத்தெதிர்கோடல்.

அடுக்கும்புலவரிலம்பாடுமுற்றுமழியகித்தங்
கொடுக்குங்கரத்தன்பெருமான்மதுரைக்குளிர்சிலம்பி
லெடுக்கும்புகழிவர்காமப்பெருக்குக்கிடையடைந்து
தடுக்குந்தகைமையதோநாணமென்னுநந்தம்மணையே. க௪

வறிதுநகைதோற்றல்.

வல்லியம்போலப்பகைமாய்த்திசையைவளர்த்தவன்சீர்ச்
செல்லியம்போலக்கொடையான்மதுரைதன்றிண்சிலம்பி
லொல்லியம்போதலர்காமவெங்கோடையொழியமுன்னே
ரல்லியம்போதகத்தேமுல்லைப்போதுமலர்ந்தனவே. க௫

முறுவற்குறிப்புணர்தல்.

கலையிற்கிடந்தமதியானெழிற்சென்னைக்காவலன்சீர்
நிலையிற்கிடந்தமதுரையென்பான்றிண்சிலம்பினிமிர்
முலையிற்கிடந்தமணிவடத்தார்புன்முறுவன்மைய
லலையிற்கிடந்ததமியேற்கொரம்பியினையதுவே. க௬

முயங்குதலுறுத்தல்.

பண்டையங்காலச்சவுரியனுணும்படியளியில்
விண்டையங்கோட்டியகையான்மதுரைதன்வெற்பனையா

ரண்டையங்கானற்பைங்கூழ்மழைகண்டாங்ககமகிழத்
தொண்டையந்தீங்கனிவாயூறற்றேறலைத்துய்த்தனமே. ௧௭

புணர்ச்சியின்மகிழ்தல்.

கலைவாய்ப்பழகுமதியான்றடஞ்சென்னைக்காவலன்றீ
யுலைவாய்ப்பயின்றகதிர்வேன்மதுரையுசிதன்வெற்பின்
முலைவாய்த்தவர்தோண்முயங்கமுயன்றதுபோன்முயன்றாற்
றலைவாய்த்தசிந்தாமணியுப்பெறவொர்தடையில்லையே. ௧௮

புகழ்தல்.

திருவேன்மதுரைப்பெருமானுசிதன்சிலம்பிலிரு
கருவேன்மதர்விழிமானனார்முகமதிகண்டதையான்
பொருவேனெனநீநிறைவாய்நிறைந்தும்பொலிகளங்கான்
வருவேன்குறைவினெனவருவாய்மதிமானலையே. ௧௯

இயற்கைப்புணர்ச்சி முற்றிற்று.

வன்புறை.

அணிந்துழிநாணியதுணர்ந்துதெளிவித்தல்.

கந்தார்களிறனையான்வேண்மதுரைக்கவின்சிலம்பிற்
பந்தார்முலையணங்கேயஞ்சல்வாழிநின்பாங்கியர்கை
வந்தாரெனநீயவராங்கணிவன்மணியிழையுங்
கொந்தார்குழலிலணியுந்திருத்தலைக்கோலமுமே. ௨௰

பெருநயப்புரைத்தல்.

ஏறும்புகழ்க்கனகக்கேதனத்தனெழிலியெனத்
தேறுங்கொடைவேண்மதுரையங்கோன்சிலம்பார்மலர்க
ணாறுந்தகைமையறிதிவண்டேசொல்லெனக்குநல
மூறுங்கிளிமொழிக்கூந்தலினாறுமொருமலரோ. ௨௧

தெய்வத்திறம்பேசல்.

கண்டுஞ்சுவையுங்கலந்தாங்குதெய்வங்கலப்பவொன்றா
யண்டுங்குணத்தெம்பிரிப்பவர்யாவருங்கொடையில்
விண்டுந்தருவுமனையான்மதுரையின்சிலம்பில்
வண்டுங்கயலும்வெருவுகண்ணாய்நம்மைவையகத்தே. ௨௨

பிரியேனென்றல்.

பொன்னைப்புலவர்க்கெனவளர்ப்போன்மழைபோலுதவுங்
கொன்னைப்பெறுவேற்கரத்தான்மதுரைக்குளிர்சிலம்பின்

மின்னைப்பொருவுமிடையணங்குள்ளமெலிவதென்னை
நின்னைப்பிரியேன்பிரியினும்யானவணிற்கலனே. ௨௩

பிரிந்துவந்தென்றல்.

திரைவாய்ப்பவளமுமுத்துமொக்கோலையுஞ்சேரமணற்
கரைவாய்க்கிடக்குங்கடற்சென்னைநாடன்கவின்மதுரை
வரைவாய்த்தடம்பொழிற்புக்குங்குநின்றுவரிவளையாய்
விரைவாய்வருவன்விளையாடுதிநின்றுமீண்டிவணே. ௨௪

இடமணித்தென்றல்.

ஓடக்கவிஞரிலம்பாடுகீர்த்தியுலகமெங்கு
நீடக்கனகஞ்சொரிமான்மதுரைநெடுஞ்சிலம்பில்
வாடக்கவின்மலர்க்கொம்பரன்னாய்நீவருந்தலெம்மூர்
மாடக்கொடிதண்ணிழறருநும்மூர்மறுகினுக்கே. ௨௫

வன்புறை முற்றிற்று.

தெளிவு.

ஆருச்சினக்கேசரிமாற்றலர்க்கனையான்வனைய
மீருக்கவள்ளன்மதுரையங்கோன்வெற்பிலெப்பொழுது
மாருக்கதிர்திசைமாறினுமாறலர்மன்னர்கொளும்
பேருக்கரிற்பிரிந்தாற்றேனெனுஞ்சூட்பெறுமுறையே. ௨௬

தெளிவு முற்றிற்று.

பிரிவுழி மகிழ்ச்சி.

செல்லுங்கிளத்தி செலவுகண்டுளத்தொடு சொல்லல்.

கனமேயனையகொடையான்மதுரைக்கவின்சிலம்பின்
மனமேயிருகைகுழறுகிருங்கமணிச்சிலம்பு
தனமேநும்பாரம்பொருதிடையென்றுதனியரற்ற
வினமேயகமலர்வாழன்னஞ்செல்கின்றதின்புறவே. ௨௭

பாகனொடுசொல்லல்.

உண்பாரொவவொன்றிசைக்கொடிதூக்கியுதவுமுயர்
விண்பார்த்தெழும்விறற்கோமான்மதுரைவியன்சிலம்பிற்
பணபார்கொடிஞ்சியந்திண்டேர்வலவநீபாரொனைத்தன்
கணபார்க்கநெஞ்சங்கவர்ந்துசெல்லாநிற்குங்காரிகையே. ௨௮

பிரிவுழிமகிழ்ச்சி முற்றிற்று.

பிரிவுழிக்கலங்கல்.

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிது காயமோவென்றல்.

மனவேபபிறடஞ்சூழ்சென்னைபூரன்மலர்க்கரத்திற்
சினவேவெலடுத்தவன்சீமான்மதுரைச்செழுஞ்சிலம்பி
னினவேய்புரையிவண்மென்றோளிணைமுயங்கும்முயக்கங்
கனவேயலதுநனவன்றுநெஞ்சென்ருகாவுத்துமே. ௨௯

வாயில்பெற்றுய்தல்.

பொன்னஞ்சிறந்ததிண்டோண்மாரன்சூழ்புலவர்க்குநிதி
யின்னஞ்சொரியுங்கரத்தான்மதுரையிறைவன்வெற்பின்
முன்னஞ்சிறந்தமுகமதைமீதிவட்கண்ணளிக
ளன்னஞ்சிறந்ததன்னுயத்திற்சாரவடுத்தனவே. ௩0

பண்புபாராட்டல்.

திகையார்புகழுடைக்கோமான்மதுரைச்சிலம்புறைநீர்த்
தகையார்குமிழெனிலாரம்பொருதிதழ்த்தாமரையின்
முகையாமெனின்முகைமுற்றிவைகாதுபுணர்ந்தினியெவ்
வகையாமுரைப்பமிப்பூவையன்னுரொழில்வார்முலையே. ௩௧

பயந்தோர்ப்பழிச்சல்.

உற்றூர்கலிசெற்றபூமான்மதுரையுதாரிவெற்பின்
மற்றூர்தருவமொன்றுள்ளங்குளிரவளர்முலைநம்
பொற்றூரகலம்பொரத்தந்தணைத்தவிப்பொன்னனங்கைப்
பெற்றாரிருவர்மரபோடுவாழியர்பேருலகே. ௩௨

கண்படைபெறாது கங்குனோதல்.

பூண்டுகிடக்கும்புகழோன்புலவர்கலியழியக்
கூண்டுகிடக்குமதுரையங்கோன்வரைக்கோதைமய
னீண்டுகிடக்குமிருள்கூரிராக்கடனீந்தலன்
மூண்டுகிடக்குங்கொல்லோபுணைபோலுமுலைக்குடமே. ௩௩

பிரிவுழிக்கலங்கன் முற்றிற்று.

இடந்தலைப்பாடு.

தந்ததெய்வந்தருமெனச் சேறல்.

சொன்னஞ்சொரியுங்கரத்தோன்மதுரையந்தொல்வரைவா
யன்னமடபுரையுநடையுடையோண்முலைதோளழுந்தத்

தன்னந்தனியேயவரவாயநீக்கிழுன்றந்தெய்வ
மின்னந்தருநெஞ்சமேயஞ்சல்வாழியெழுதியின்றே. ௧௪

பூத்துகில்கொண்டல்.

படிவாய்க்குழற்கண்ணணிமெய்ப்பநுண்ணிடைபாடுறுமென்
றடிவாய்ச்சிலம்புபுலம்பநின்றொராரணங்கின்
வடிவாய்த்தகையன்மதுரையங்கோன்சென்னைவான்பொழிலிற்
கடிவாய்த்தமாதவிக்கீழின்றதென்னுடைக்கண்மணியே. ௧௫

மயங்கல்.

ஏரார்பொழிற்சென்னையூரோன்மதுரையிருஞ்சிலம்பிற்
கூராரயிற்கண்மயிலனையார்முலைக்கோட்டழுந்தத்
தாராரகலந்தழைத்ததென்றாலிந்தத்தாரணிக்கண்
ணோராருள்ர்நெஞ்சமேநமைப்போனலமுண்டவரே. ௧௬

புகழ்தல்.

தன்னூர்களங்கினிகர்போமதிவரத்தாமரைகேண்
மின்னூரிதழ்களொடுக்குலைவீவிறலோன்மதுரைப்
பொன்னூர்சிறைவண்டறைபூம்பொழில்புடைசூழ்நதசென்னை
யன்னூர்களிமுலையார்முகம்போறலரிதுனக்கே. ௧௭

ஆயத்துய்த்தல்.

பொன்னுய்விளங்குங்கொடையான்மருவலர்போரழிக்கு
மின்னுரயிற்கரவீரன்மதுரைவியன்கொள்சென்னை
யன்னுயணிமுலையாய்மெல்லவாங்கேயடைந்தருணீ
நின்னுயகின்முகங்காணுந்தகைமையினிற்கின்றதே. ௧௮

இடந்தலைப்பாடு முற்றிற்று.

பாங்கற்கூட்டம்.

தலைவன் பாங்கனைச்சார்தல்.

அடுப்பாரெவரையுமாதரிப்போன்சென்னையூரநங்கன்
கொடுப்பார்தலைவன்மதுரையங்கோமான்குளிர்சிலம்பிற்
கடுப்பார்மனத்துயர்நம்பாங்கன்காணியகாட்டினம்மைத்
தடுப்பாருளர்கொன்மடமான்முலைகடழுவுதற்கே. ௧௯

பாங்கன் றலைவனை யுற்றதுவினுதல்.

தேடியனீர்மைமதுரையங்கோன்சென்னையூர்விளங்கக்
கூடியவொண்டமிழ்வாய்நுழைந்தாய்கொல்கொழுநறவ

மோடியருமத்தடங்தோண்மெலிவிளைனிமழுங்க
வாடியகாரணமேன்சிலம்பாவிந்தமாலித்தே. ௪௦

தொடைவாய்த்ததிண்டோளுசிதன்மதுரைத்தொடரளியி
னடைவாய்பபொழில்வண்டுறைபொழிற்சென்னையன்னுரொருவர்
புடையாய்ச்சுழலும்விழியாய்ச்சுழன்றுமொருவறுநுண் [மே.
ணிடையாய்ச்சுருங்கிக்குழையாய்க்குழைந்ததின்றென்னெஞ்ச

கற்றறிபாங்கன்கழறல்.

கஞ்சங்கவின்றகொடையாளர்காங்கேயக்கவுண்டுவெட்கி
மஞ்சங்கமர்ந்தமதுரையங்கானகுன்றமாலவரைச்செம
பஞ்சங்கலந்தபொற்சீறடியோர்மடப்பாவைகண்டு
நெஞ்சநகுழைந்தனைநீதகுமோசொல்லெனனநந்தகையே. ௪௨

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

வண்டார்மணித்தடநதேர்ண்மானனவனமதுரையங்கோன்
விண்டாரமடமயிலன்னுர்தமவளளருவகருவனை
யொணடாரவிழிகளையுற்றுங்கணபாமவனையபாலொருவா
கணடாருளரேலுரையாருரைத்திவிக்கட்டுரையே. ௪௩

கிழவோற்பழித்தல்.

பொலிகின்றவெங்கலிமாய்க்கும்மதுரைப்பொலங்கிரிவாய்
மலிகினறபுள்ளிச்சிறுமான்விழிப்பவரியுழுவை
நலிகின்றதென்னவொரபேதையைக்கண்டுநெறுந்தொடைத்தோண
மெலிகின்றவெற்பனினக்கேவரொபபரிம்மேதினிக்கே. ௪௪

கிழவோன் வேட்கைதாங்கற் கருமைசாற்றல்.

நஞ்சுண்டகெண்டையைவாளிதொட்டாலென்னநணபநிறப
பஞ்சுணடசீறடித்தோகையன்னுள்விழிபார்ப்பமயன்
மிஞ்சுண்டவென்னைபபெருமானமதுரைவியன்சிலமபி
லஞ்சுண்டசொற்றெட்டனைநீதியன்றிவ்வகலிடத்தே. ௪௫

பாங்கன் றன்மனத்தழுங்கல்.

தோட்பட்டவெற்றித்தொடையானமதுரைததிணணுர்சிலமபி
ஞட்பட்டகல்விநலநதேர்பெருநதகைநணபனிரு
வாட்பட்டபினனாமனமயாநதாங்கொருமாதாவிழிக்
கோட்பட்டனனெஞ்சமேசெய்வதெனனிக்குவலயத்தே ௪௬

தலைவனோடழுங்கல்.

சொல்லார்தொடையன் [illegible] துறைவிணடோய்சிலம்பி
னலலார்விழிப்பகண்பா [illegible] வையென்றால்
வலலாருளர்கொல் [illegible] கடலவறளின்
செலலாரயுனலபிரி [illegible] குந்தேக்குதற்கே. ௪௭

எ [illegible] றென்றல்.

களித்தார்கறையடி [illegible] வரையோ
துளித்தார்மதுவண்ட [illegible] னைச்சூழ்பொழிலோ
தெளித்தார்வியக் [illegible] சிந்தையட்சென்
றொளித்தார்முகிழ் [illegible] னே. ௪௮

அவ [illegible] றென்றல்.

வாரொன்றிளமாமுலை [illegible] முகமும
பாரொன்றடிகளுடனே [illegible] யுங்கொண்
டேரொன்றுவாழ் [illegible] மதுரையிருஞ்சிலம்பின்
சூரொன்றிருக்குமென் [illegible] சென்னைச்சூழ்பொழிற்கே.

[illegible] தேற்றல்.

அலைவாய்ப்பலவுங்கரு [illegible] முள்ளாமுளரி
யிலைவாய்ப்புன [illegible] சிலம்பா
கலைவாய்மதுரை [illegible] சென்னையன்னவக்காரிகையை
மலைவாய்மலர்ப்பொழில் [illegible] யான்போய்வருமளவே. ௫0

[illegible] ச்சேறல்.

அறைவணடலமருந்தாமரைப்போதினிலவ்வியமபோ
துறைவண்டைகையொடுசீமான்மதுரையுசிதன்வெற்பி
னிறைவணபுனற்றடஞ்சூழ்பூமபொழிலவயினிறகுங்கொன்னம
மிறைவனறடமபுயத்தோனகணடகாமரிளங்கொடியே. ௫௧

இறைவியைக்காண்டல்.

அறிவன்பிதயததடக்கியசீாமையஞாவமுளளோர்
செறிவனபுகழானமதுரையங்கோனறிணசிலமபனகண்ட
வெறிவணசூடாக்கணணெழினமடமானிதுதானிதுதான்
பொறிவணடறையுநதகவுடைசசெனனையமபூமபொழிலே ௫௨

இகழ்ந்ததற்கிரங்கல்.

முலையாமுகைககணமுகமாமதிவிளஙகுமபுருவஞ்
சிலையாமிணைககணகுவளைகளாஞசெவ்விதழ்துகிராம

மலையாப்புயத்தன்மதுரையங்கோனென்வெற்பிலற்புதமா
மிலையாமிடையெனிலயாருருவாக [illegible] தழைகடுக்க ௫௩

[illegible]

முடிபட்டுறுமிறையன்றென்மதுரை [illegible] வெற்பிற்
கடிபடலாமிவவா [illegible]
விடிபட்டுவாட்கண [illegible] குழற்குட
[illegible] வீர். ௫௪

[illegible]

ஒன்றாபுகழுமதுரை [illegible]
மின்றரிடையிவ்வண [illegible] தவனை
மன்றாவமிக்கவொர [illegible] ழுதப
பொன்றாகலபபொருப [illegible] முலைய. ௫௫

தலைவன்றன் [illegible] கூறல்.

பாவாய்ப்பழகியசீமான்மதுரை [illegible] லெம்பிற்
கோவாய்முகைகைகைகால் [illegible] கொங்கையென்று
மேவாபடிணயுமபடியொன [illegible] முற்றும்
பூவாயபபொலிவுறவுண [illegible] பொற்கொடியே ௫௬

[illegible]

தேன்றென்றுபூமபிணையற்றே [illegible] குழுயார்
வான்றுகையன்மதுரையங்கோ [illegible] மால்வரையின்
கான்றுவணடறைபூம்பொழில்வாய்வடிக்கணபரப்பி
மான்றுநிற்குமெனிலதுவேயென்றன்மன்னுயிரோ ௫௭

தலைவியைக் காண்டல்.

அலைவாரகலிகெடட்டழியசசெயதனனவராதரிக்குங்
கலைவாரபொருவிலநிருனமதுரையங்காவலன்றன
மலைவாழணங்கனையாரமமாநோய்க்குமருநதவு
நிலைவாரமுலைச்சிமிழ்கொணடனறுமெகாலவிவணிற்கின்றதே. ௫௮

கலவியின்மகிழ்தல்

செழுநதண மதிமுகத்தான்மருவாரைச்செருவழிக்குங்
கொழுநதிணணருமபுயக்கோமானமதுரைக்குளிர்சிலமபி
லெழுநதுநதுவேறகணமடமானிருமுலையென்னிருதோ
ளழுநதுநதோறுமிககினிதாயததழைக்கினறதாருயிரோ. ௫௯

புகழ்தல்.

கலைகண்டவன்செழுங்க[illegible]யன்றோளன்செல்வங்கலவு
நிலைகண்ட[illegible]புகழ்க்கோ[illegible]ங்கிரிவாய்த
தலைகண்டதாமரை[illegible]த்தடங்கண்ணிதன
முலைகண்டழிற்றையுன்[illegible]ன்றுமுறைகண்டதே. ௬௦

ப[illegible]வருகெனப்பகர்தல்.

கறைகெழுவேற்கைம[illegible]வெற்பிற்கானிக
ளறைபொழிலவாய்த்[illegible]கடையிற்
பொறைபெறுகாவியுமா[illegible]ப்பான்றுனைநே
டுறைதருபாங்கியுட[illegible]றையான்றுதலே. ௬௧

பாங்கற்கூட்டல்.

பொதிகண்டகீர்த்தியுடையான்மதுரைப்பொழிற்காதது
நிதிகண்டவேழையாநெஞ்சிற்செழுமிக்களிமலிய, த
ததிகண்டபூம்பொழில்வாயன்னகன்னனைறனைமுகமா
மதிகண்டலாவாய்ச்சியழ்ந்தோயோரையுவந்தனையே ௬௨

பாங்கற்கூட்ட முற்றிற்று.

பாங்கி மதியுடன்பாடு.

தோற்றத்தா லாராய்தல்

வளையாடியகையணங்கேமதுரைமதிபனவெறுபிற
கிளையாடியநறும்போதுகொய்தோர்கிளரபாதெறிநூ
களையாடியோகளையாடிக்கொலலோகமழவெறவெதிரூப
விளையாடியோநினக்குற்றதெனவாட்டதிலவேறுமையே. ௬௩

ஒழுக்கத்தா லையர்தீர்தல்

சிறைகமழவண்டறைபூம்பொழிற்சென்னைசசிமானபுகழ்
னறைகழனமன்னனைனையானமதுரைமருசாரசிலம்பிற
கறைகெழுவேறகணலலாய்வானமிசைககதிரகாலுமிடப
பிறைதொழுவாரொழுவாரமடவாரிறபெரியவரோ ௬௪

குறைநயப்புரைத்தல்

நறுந்தொண்டைவாய்க்கிழிதழ்ச்செந்திறங்கடைக்கண்ணினைன
வுறுங்கண்ணமாவெண்ணிறமுதுவாங்கிடவோங்குகளி
தெறுங்கண்ணளியனமதுரையங்கோனவரைத்தேமொழிநீ
பெறுந்தணமிகக்குடைந்தாயறைவாயெயபெருஞ்சுனையே. ௬௫

சுனைவியந்துரைத்தல்.

காந்துகரிக்கோட்டெழின்முலையாய்நெடுங்காசினிக்கண்
ணேந்துகனக்கும்புகழோன்மதுரையிரும்வரைவாய்ச்
சாந்துகுழைத்துத்தனிமுல்லைமாலையுந்தான்புனையிற்
போந்துகுளிப்பன்மதிநீகுளித்தவப்பூஞ்சுனையே. ௬௫

தகையணங்குறுத்தல்.

மாறனெனுங்கைமதுரைமகிபன்மணிவரைவாழ்
சேறனெனுநெடுங்கண்ணணங்கேயொருசேயிழைநின்
போருணமர்பவள்வான்சுனையாடியபோயினளிவ்
வேறன்பிரிக்கும்வருங்காறுநீயிவண்மேவுகவே. ௬௭

நடுங்கநாட்டம்.

வடுமால்வடிக்கண்மயிலையன்னாய்தமிழ்மாறனெழி
னெடுமாலநங்கனெனுங்கோன்மதுரைதன்னேரலருட்
படுமாலரியவெருவினென்னுள்ளம்பயப்படக்கோட்
டடுமால்களிறுபிளக்கக்கண்டேனங்கோராண்டகையே. ௬௮

பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுத்தல்.

வெடிக்குங்கழைமணிமுத்தமெல்லாம்வில்லுமிழ்ந்துசிந்து
முடிக்கொண்டலாற்பொலிசீமான்மதுரைமுராரிவெற்பிற்
பிடிக்கும்படிமானெடுங்கண்ணிகொண்டுமுயன்றுபெறும்
படிக்கங்குக்கொள்ளுதுமான்கண்ணியாமுயிர்ப்பாங்கியையே. ௬௯

ஊர்வினாதல்.

நிணவாய்நுதியயிற்கோமான்மதுரைநிமிர்சிலம்பின்
கணவாய்நடந்திருகால்கணொந்தேனுண்மைகாண்மினிவ்
ணணவாய்வகையறியேன்புதியேன்றமிநண்ணினன்யான்
மணவாய்மலர்மடவீரெவண்யாதுநும்வாழ்பதியே. ௭௦

பெயர்வினாதல்.

சலிக்கும்புலவர்கலிகெடச்செற்றுத்தரணிமுற்றுஞ்
சொலிக்குங்கொடையுடையோன்வேண்மதுரைதன்றொல்லரிய
செலிக்குன்றமர்நும்பதிசொல்லகில்லிர்சிறையளிக
ளொலிக்குங்குழன்மடவீரென்னபேருரைமின்களே. ௭௧

கெடுதிவினாதல்.

நண்ணார்வியக்குநடையுடையோன்சென்னைநாடனுயர்
கண்ணார்களிக்கவருள்வோன்மதுரைக்கவின்சிலம்பிற்

பண்ணார்மொழிமடப்பாவைநல்லீரொர்பகழிதைத்த
புண்ணார்களிறொன்றுபோந்ததுண்டோநும்புனத்தயலே. எஉ

ஒழிந்ததுவினாதல்.

ஆய்முத்தமிழ்வளர்ப்போன்மாறனன்னவண்ணன்மதுரை
வேய்முத்துதிர்க்குமஞ்சார்நீள்கொடுமுடிவெற்பொடெதிர்
கூய்முத்திளமுலைகாலின்றுடியன்மொய்குழலீர்
வாய்முத்துதிருமென்றோதிறந்திலிர்மாணிதழே. எங

யாரோயிவர்மனத்தெண்ணம் யாதெனத்தேர்தல்.

மன்னுங்கலிகெடத்தேய்க்குங்கொடையன்மதுரைவெற்பிற்
றுன்னுந்தினையவிப்பூம்புனம்போந்துதுணிந்துமனத்
துன்னுங்கருத்தென்னையோவூர்பெயரொடுவேழம்வினாய்ப்
பின்னும்வினவுகின்றார்யாவரிந்தப்பெரியவரே. எச

எண்ணந்தெளிதல்.

சூழும்புலவர்கலிசிதைப்போன்மதுரைவரைவாய்
வாழும்பதியும்பெயருங்களிற்றுவரவுமென்று
நீளுங்கதிரயிற்கையாரிவருக்குநெஞ்சிலில்லை
வீழுங்கருத்தினைக்காட்டினவாய்மொழிவேறென்னவே. எரு

தலைவன்கையுறையேந்திவருதல்.

ஒன்னார்கழியவொடுக்குந்திறலுடையோன்மதுரைக்
கொன்னாரயிற்கையுடனிருக்கின்றகொழுநிதியிற்
பொன்னார்சிறைவண்டறைகுழற்பேதையோர்பூவையன்ன
மின்னாரிகுளையுடனிருந்தாளவண்மேவுதுமே. எசா

தலைவனவ்வகைவினாதல்.

பெருமான்வரோதயன்மாறன்மதுரைப்பெருஞ்சிலம்பிற்
கருமானனையதடங்கணல்லீர்புதியேன்கரத்துத்
தருமாங்கணைபட்டுச்சாலவும்வாடித்தவித்துநின்ற
வொருமான்வரக்கண்டதுண்டோவுமாமினிவ்வொண்புனத்தே.

எதிர்மொழிகொடுத்தல்.

உலைவிளையாடயிலொண்கரத்திருசிதன்மதுரை
மலைவிளையாடிவளர்தினையோம்பிக்கிளிவரவோர்ந்
தலைவிலையாகவமருங்கொடிச்சியரோமங்கிமுழு
கலைவிழைமான்வரக்கண்டிலம்யாமிசென்னே எஅ

இறைவனைநதுதல்.

பொருமான்மதகரிபொற்றேணமதுரைப்பொலங்குடுமித்
திருமால்வரையன்னசேயிழையீரிவர்செய்ததென்னும
வருமாண்பகழியும்வில்லுமற்றின்றிமணிக்கரத்தி
லருமான்படத்தொட்டனராற்றழைமிக்கருமையரோ. எக

பாங்கிமதியினவரவர்மனக்கருத்துணர்தல்.

தேனலமோர்ந்துசிறையளிசூழ்செழுந்தோணமதுரைக்
கோனலமேவுந்தடவரைச்சாரற்குளிர்புனத்தி
னேனலங்காவலிவண்மாட்டிலையிவன்மாட்டுமில்லை
மானலங்காண்டலிவர்கண்கள்காட்டுமனக்கருத்தே. அ0

பாங்கிமதியுடன்பாடு முற்றிற்று.

பாங்கியிற் கூட்டம்.

தலைவனுட்கோள்சாற்றல்.

மல்லுந்தடமானெடுங்கைக்களிறனையான்மதுரைச்
செலலுந்தருவரைக்கொம்பரன்னீர்நுமாசீறடிக்கி
ழல்லுமபகலுமறைதொண்டுசெய்தற்கரம்பையனை
நில்லுங்களென்றமைப்பேனென்னையாண்மினிழலளித்தே. அக

பாங்கிதலமறைகிளத்தல்.

செழிக்குங்கழைவில்லநங்கனன்னீர்தஞ்செருவழியச்
சுழிக்குங்களிறுகடாநுமரோயெமர்சூழ்கவிமுற்
றழிக்குங்கரத்தனடன்மாமதுரைதன்னூடருவி
கொழிக்குமணிமுத்தொளிர்மலைச்சாரற்குறவர்களே. அஉ

தலைவன்றலைவிதன்னையுயர்த்தல்.

மல்லாரகலமலர்த்தொங்கலான்றமிழ்மாறனிதிச்
செல்லார்கரத்தன்மதுரையங்கோன்சென்னைநாடனையீர்
கொல்லார்களிறுகுழுவுநுஞ்சாரற்குலமகளே
நல்லாளொனின்மன்பிறர்யாவரோயிந்தநானிலத்தே. அங

பாங்கி யறியாள்போன்று வினுதல்.

பொறைகெழுநெஞ்சத்தளியோன்மதுரைப்பொலஞ்சிலம்பி
னிறைகெழுகோட்டுமணிமுத்தெறிந்துசிலம்பெதிர்கூய்
நறைகமழ்பூங்கண்ணியுடைக்கரும்பண்ணைநயந்துநிற்குஞ்
சிறைகள்பலருளர்யாரிவான்மதேயண்ணல்சிந்தனையே அச

இறையோனிறைவித்தன்மையியம்பல்.

நோக்குங்குவளைகளாங்கண்கணூற்பகவாமருங்குல்
பூக்குங்குமுதமதாஞ்செய்யவாய்பூண்முலைமுடியாங்
கோக்குஞ்சரங்கடவுங்கோன்மதுரைக்கொழுநிதியந்
தேக்குந்தடநெடுஞ்சேர்ச்சென்னையன்னவத்தேமொழிக்கே. ௮௫

பாங்கி தலைவியருமை சாற்றல்.

விளக்குந்திறனெடுந்தோளண்ணலேபிறர்மேவுதற்கிங்
கிளைக்குமெளியளென்றெண்ணன்மினீரொதிர்ந்தாரைவென்று
திளைக்கும்புகழின்மதுரையங்கோன்செழுஞ்சென்னையன்னாள்
கிளைக்கும்பிறருக்குமாலருமந்தகிளிமொழியே. ௮௬

தலைவனின்றியமையாமையியம்பல்.

கொன்னாரயிற்கணைமயிலையன்னாயெழுங்கூழ்முழுதுந்
தென்னார்மழையொன்றையின்றமையாதுதுபோற்சிறந்த
பொன்னார்தலைவன்மதுரைநிதியம்பொலிந்தசென்னை
யன்னாரொருவரையின்றமையாதென்றனாருயிரோ. ௮௭

பாங்கிநின்குறைநீயேசென்றுரையென்றல்.

ஈயேயெனவிரப்பாரைக்காக்குமிவறன்மையர்
போயேகழியவளிகொண்மதுரைப்பொலங்கிரியின்
வாயேவனையகண்ணாள்வயிற்போய்நின்மனக்குறையை
நீயேயறைகநறைகமழ்திண்டோணெடுந்தகையே. ௮௮

பாங்கியைத்தலைவன்பழித்தல்.

வில்லொன்றுவாணுதன்மாட்டடைந்தென்னுண்மெலிவையெல்லா[ஞ்
சொல்லென்றியானிற்றொடர்ந்ததென்னாந்தடந்தோண்மதுரைச்
செல்லொன்றுவானிமிர்பூம்பொழிற்சென்னையன்னாய்சிறிய
புல்லொன்றுகொண்டுகருங்கடனீந்தப்புகுந்ததுவே. ௮௯

பாங்கிபேதைமையூட்டல்.

இன்றக்கமாமலர்த்தொங்கலந்தோளிறையோன்மதுரைக்
குன்றக்குறவர்மகள்சிலைவாங்கிக்குனித்துநின்று
கன்றக்கலையுமுயலுங்கொளுங்கணையொத்தகண்ணாள்
பொன்றக்கவல்பிறர்நோயுணராதபொருளினளே. ௯௦

காதலன்றலைவி மூதறிவுடைமைமொழிதல்.

கரிக்கொம்பனையமுலையாயெழுவெங்கலிமுழுது
மெரிக்குமளியனமதுரையங்கோன்சென்னையீர்ம்பொழில்வாய்

விரிக்குந்தழையதோர்மாதவிக்கீழ்வெவ்விடாய்கழியப்
பிரிக்குமிளநீரளித்தவர்க்கேதுகொல்பேதைமையே. ௯௧

பாங்கிமன்னுறு புணர்ச்சிமறையுறக்கூறல்.

நலந்தருவேற்கைநறுந்தார்மதுரைநன்கார்சிலம்பி
னுலந்தருதோளண்ணலேயிருவீருமொருதனியே
வலந்தருசென்னையம்பூம்பொழில்வாயெழின்மாதவிக்கீழ்
கலந்தனிராயினென்னுலென்கொலாமினிக்காரியமே. ௯௨

தன்னிலைதலைவன்சாற்றல்.

பொருளன்றியின்றிவ்வுலகமென்பாரதுபோன்றினியா
னுருளொன்றுமானெடுந்தேரன்மதுரையுதாரிவெற்பி
லிருளன்றியொன்றும்பொருவாக்குழலியையெய்துறநின்
னருளன்றியின்றுகண்டாய்பிறிதொன்றுமணியிழையே. ௯௩

பாங்கியுலகியலுரைத்தல்.

வடுவின்றியநெறித்தாயங்கொர்வாலுடைமந்திதழீஇக்
கடுவன்றுயில்வதுகண்டனையேகமழ்பூஞ்சிலம்பா
நடுவன்புகழாபரணன்மதுரைநற்சென்னையன்ன
நெடுவண்குழலார்தமைப்பெறுவாயினிநீவரைந்தே. ௯௪

தலைமகன்மறுத்தல்.

கோனனையான்வெங்கொடுங்கலிதேய்க்குங்கொடையினுயர்
வானனையான்சிலைமாறன்மதுரைவரையனைய
தேனனைபூங்குழற்சிறடிப்பாவையின்றேமொழியை
மானனையாய்வரைவேனியெனுருயிர்வைத்தபின்னே. ௯௫

பாங்கியஞ்சி யச்சுறுத்தல்.

பனிக்குங்கதிர்குன்றப்பாய்பரியுந்திப்பகல்கரந்தான்
றனிக்குந்தகையினர்செல்லுதிர்யாங்களுந்தங்கலமா
வினிக்கும்புகழின்மதுரையங்கோன்வெற்பிலெப்பொழுதுங்
குனிக்குஞ்சிலையினரீட்டியர்காணெங்குறவர்களே. ௯௬

தலைவன்கையுறைபுகழ்தல்.

பேணார்கழியவொழிக்குந்திறற்பெருமான்மதுரைச்
சேணார்முகிலுரிஞ்சச்சூழ்நெடுமதிட்சென்னையன்னீர
மாணார்கிளைவயினீங்கித்தவம்புரிநதுங்கண்மணிப
பூணார்முலைகொளவந்ததுகாணிந்தப்பூந்தழையே. ௯௭

பாங்கிகையுறைமறுத்தல்.

இக்குன்றத்தென்றைக்குமில்லாவிருந்தாயிருப்பதனா
லெக்குன்றத்துள்ளதென்னாவொழீர்யாங்களேலேமிளமா
னொக்கின்றசிற்றடியல்குல்கண்டாலுசிதன்மதுரை
மைக்குன்றத்தாம்பழியீர்ஞ்சிலம்பாநின்கைமாந்தழையே. ௯௮

ஆற்றநெஞ்சொ டவன்புலத்தல்.

இழையேயெனுமருங்கேழைபொருட்டிணைவாயிணைத்துக்
குழையேபெறுமென்றனிநெஞ்சமேயென்கொலாமளியின்
மழையேயெனுங்கைமதுரையங்கோமான்மணிவரைவாய்த்
தழையேயெனும்பெயர்நீங்கவிதுமுன்றவஞ்செய்ததே. ௯௯

பாங்கியாற்றுவித்தகற்றல்.

பொற்பாரிளமுலையாளின்பொருட்டுப்புலம்பிளைந்து
நிற்பாயினியிவணிற்கலைநிமிர்தோளரிய
வெற்பாமதுரையங்கோன்புகழென்னவிளங்குகதி
ரொற்பாடடைமதியேற்குதுமானின்கையீர்ந்தழையே. ௧௦௦

இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்,
மடலே பொருளென மதித்தல்.

உடலொன்றுயிரினுற்றுளேரிளமுலையொண்டொடியின்
கடலொன்றுகாமக்கரைபுரள்வெள்ளங்கடப்பதற்கோ
ரடலொன்றுகேசரியன்னான்மதுரைவெற்பார்பனைமா
மடலொன்றுளதுபுனையிற்கவலன்மதிநெஞ்சமே. ௧௦௧

பாங்கிக்குலகின்மேல்வைத்துரைத்தல்.

மணித்துப்பனையவங்கேழிதழ்ப்பாவைவையம்முழுதுந்
திணித்துப்படர்புகழான்வேண்மதுரைவிண்டோய்சிலம்பிற்
பிணித்துக்கவற்றும்பெருங்காமமுழ்கப்பெறினிளைஞர்
துணித்துப்பனைச்செங்கொழுமடலூரத்துணிவர்களே. ௧௦௨

அதனைத்தன்மேல்வைத்துச்சாற்றல்.

ஒண்ணிறநீறுடலிற்பூசிப்பூளையினோடெருக்கங்
கண்ணியுஞ்சூடிமடன்மாக்கடாய்க்கிழிகைபிடித்துப்
பண்ணியவாளன்புகழ்சான்மதுரைப்பொருப்பனையீர்
நண்ணிநுஞ்சிறூர்நடுமறுகூர்குவனானின்றே. ௧௦௩

பாங்கிதலைமகளவயவத்தருமைசாற்றல்.

விண்டாரகரத்தன்வினைமாறன்மதுரையொரவெற்பனைய
வண்டார்விழியள்வடிவமெலாநீவரைகுவைதேங்

கண்டார்மொழியுங்கருங்குழனூற்றமுங்கைவருமே
லொண்டார்புயத்துவெற்பாளூர்கவாழியொருமடலே. க0௪

தலைமகன்றன்னைத்தானேபுகழ்தல்.

கன்றென்றரியசெங்காந்தளங்கையிர்கமழ்நெடுந்தோ
ணன்றென்றுவள்ளன்மதுரையங்கோனலஞ்சார்சிலம்பின்
மன்றலம்பூங்குழற்றோகையன்னவொளிர்மாமருங்கு
லின்றென்றனாதையுண்டென்றுமன்னவெழுதுவனே. க0ரு

பாங்கியருளியல்கிளத்தல்.

சிலைவளர்கையன்றிருமான்மதுரைச்செழுஞ்சிலம்பிற்
கலைவளர்தண்ணளியோருரலர்கட்டழித்துக்கண்டீர்
நிலைவளர்பார்ப்பொடுமுட்டையும்போக்கிநெடியகன்னிக்
குலைவளர்பெண்ணைக்கொழுமடலேறுபுகொற்றவரே. க0௬

கோண்டுநிலைகூறல்.

பொரும்பனையார்கரவேழமனையவன்போற்றும்பொன்னூக்
துரும்பனையார்மதுரைக்கோன்வரைமிசைச்சொன்முதிர்செங்
கரும்பனையார்நின்குறைமுடியாரோற்கருமபனையார்
தரும்பனையார்வெற்பநோர்ந்துமுடிப்பர்தவிக்கலையே. க0எ

தலைவியிளமைத்தன்மை பாங்கிதலைவற்குணர்த்தல்.

முற்றிலெடுத்தொளிர்முத்தம்புடைக்குமம்முன்றில்வைகிச்
சிற்றிலிழைத்துறுஞ்செய்குன்றுசெய்யுமெஞ்சிற்றடிநோ
மற்றிலைவான்றருவென்பான்மதுரைமஞ்சார்சிலம்பா
கற்றிலளொன்றுமவட்பொருட்டென்னிகவலுதியே. க0அ

தலைவன்றலைவிவருந்தியவண்ணமுரைத்தல்.

தாகக்கலைபயிலும்புலவோர்க்குத்தனங்குவிய
லாகக்குவிக்குமதுரையங்கோன்சென்னைநாடனையாய்
நாகக்குருளையொர்நாகமணங்கியவாறுணாமோ
மேகக்கருங்குழலாளென்னணங்கிமெலிவித்கதே. க0கூ

பாங்கி செவ்வியருமை செப்பல்.

செறிபந்திகவாதளிக்குமதுரைமஞ்சார்சிலம்பிற்
பொறிவண்டறைமலர்த்தார்மொய்ம்பகேளெமர்பூங்குழலா
ளெறிபந்தெடுத்திலளீர்ஞ்சுனையாடிலளின்னமுய
ரறிபவைபறிந்திலள்யானவட்கென்கொலறைகுவனே. கக0

தலைவன் செவ்வியெளிமை செப்பல்.

கொடைசேர்கரத்தன்மதுரையங்கோன்குளிர்மால்வரைவாய்த்
தடைசேர்புனற்கோர்சிறுவழிகாட்டவிற்றூதுறைபூந்
தொடைசேர்குழலிக்கென்றுன்பஞ்சிறிதுநீசொல்லுவையே
னடைசேரனமனையாய்நிற்றழுவிநயப்பிக்குமே. ககக

பாங்கி யென்னை மறைத்தபின் னெளிதென நகுதல்.

வருநெடுந்தானையன்வள்ளன்மதுரைமஞ்சார்சிலம்பிற்
றருநறுந்தீஞ்சுனைதோலிருக்கக்கொளுந்தன்மையன்றே
யிருநெடுந்தோளண்ணலேயறிவாழிமற்றென்னையன்றிக்
கருநெடுங்கண்ணிக்கழைத்தோட்புணருமக்காரியமே. ககஉ

அந்நகைபொறாஅதவன் புலம்பல்.

பகைகொண்டெதிர்க்குநர்ப்பற்றறத்தேய்க்கும்படையந்தோண்
மிகைகொண்டவெற்றிமதுரையங்கோமான்வியன்சிலம்பிற்
றகைகொண்டமம்மாதனிலுழல்வேனைத்தனிமொழியா
நகைகொண்டகைக்கின்றனைவிதியேகொன்னறுநுதலே. ககங

பாங்கி தலைவனைத் தேற்றல்.

கொடையானெடுங்கவிகுன்றச்செற்றோன்குளிர்மாமுகத்த
னடையானுபருமதுரையங்கோன்சென்னைநாடனையா
ளடையாள்பிறவிடமாடாள்பிறவொன்றுமென்னையன்றிக்
குடையாணறுஞ்சுனைகொய்யாண்மலரிக்குணத்தினளே. ககச

பாங்கி கையுறை யேற்றல்.

ஏழைமிடிக்குக்கொடைக்கூற்றுடையிறையோன்மதுரை
மாழைமுடித்தனதன்சீர்ச்சிலம்பதருகமணிக்
கேழைமுடிக்குங்கிளர்நகையாட்குநினக்குமுள்ள
ஊழைமுடிக்குங்கருவியினுற்றநின்றொண்டைமையே. ககரு

கிழவோனுற்றல்.

மாவியலண்ணன்மதுரையங்கோமான்வரையணங்கா
லாவியினையவினைத்திங்குச்சோர்ந்தவெனக்கருநீர்க்
காவியனையகருங்கண்ணினளிவள்கட்டுரைசஞ்
சீவியனையதென்றாலென்கொல்யானினித்தேடுவதே. ககசா

இறைவன்றனக்குத் தலைநேர்பாங்கி,
இறைவிக்கவன் குறையுணர்த்தல்.

பலகால்வருவன்பசுந்தழைநல்குவன்பாவைநலனீர்
சிலகான்விலங்குறக்கண்டனிரோவென்பன்செலவுநிதி

யிலகார்மதுரையிறைவன்சிலம்பினம்மீர்ம்புனத்தை
விலகானணங்கனையாயெவனோவொர்விருந்தினனே. ககஎ

இறைவியறியாள்போன்று துறியாள் கூறல்.

வேலுக்குநேரெனவெவ்விடத்தோடுவிராய்க்கிடந்து
நீலுக்குநேரருங்கூர்விழியாயிந்தநீணிலத்திற்
சூலுக்குநிற்குந்துணைமலர்க்கையன்றுரைமதுரை
மாலுக்குநேருங்கண்டாய்நெடுஞ்சென்னைவடமலையே. ககஅ

பாங்கி யிறையோற்கண்டமை பகர்தல்.

வானையுங்கோட்டுமலர்க்கைமதுரைக்கோமான்சிலம்பிற்
கானையுங்காட்டுகருங்குழலாயன்றுகண்டதுண்டே
யானையுங்கேட்டுப்பின்னூரையும்பேரையும்யாதென்றுமுன்
மானையுங்கேட்டுநம்மீர்ம்புனத்தேவந்தவள்ளலையே. ககக

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

நாவையெடுக்குதனன்றன்றுகாண்கண்ணோர்கழிய
வேவையெடுக்குமிறைவன்மதுரையிருஞ்சிலம்பின்
மாவைநகரைவினவிவரும்வழிப்போக்கற்கண்டு
பாவையினையனையாய்நின்றுகூறும்பழிமொழிக்கே. க௨0

பாங்கி யென்னை மறைப்பதென்னெனத் தழால்.

நிறைக்கின்றவன்பினனற்புலவோர்க்குநிதிநிதிய
மிறைக்கின்றவள்ளன்மதுரையங்கோன்வெற்பிலென்னையுநீ
மறைக்கின்றவாறென்மலரடிபோற்றிவழுத்துதலைப்
பிறைக்கென்றுமாமியணிவாணுதலாய்சற்றும்பேணலையே. க௨க

பாங்கி கையுறைபுகழ்தல்.

மணியொத்தொளிர்நிரைவாணகையாய்மிகையாம்வறுமைப்
பிணியற்றெழியவருள்வோன்மதுரைப்பெருஞ்சிலம்பிற்
றணியத்தகுந்ததுகாமவெவ்வேட்கைதனிமுலையா
ரணியத்தகுந்ததுதானெளிகாவிவ்வருந்தழையே. க௨௨

தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தல்.

வானோர்கரத்தன்மதுரையங்கோன்வரையார்கடுவன்
றேனூர்முதிர்மாங்கனிகொண்டெழில்மந்திவாய்திணிப்பக்
கானூர்மலர்க்குழலாயென்னைநோக்கிக்கரைந்துருகிப்
போனரொருவர்பின்வந்திலரானம்புனத்தயலே. க௨௩

மறுத்தற் கருமைமாட்டல்.

இருவான்கரத்தன்மதுரையங்கோன்வெற்பிலெப்பொழுதுந்
தருவான்றழைகண்மிகப்பலபொய்களுஞ்சாற்றினனையா
னொருவானொருதினங்காறுஞ்சிலம்பனுழல்வனின்னம்
வருவான்வரினவனுக்கினிப்பொய்சொல்லவாயிலையே. கஉச

தலைவன் குறிப்பு வேறாக நேரிப்படக்கூறல்.

அன்பணிவான்றருவன்றன்மதுரையரையன்வெற்பின்
முன்பணிவான்பலகாலடைந்துங்குறைமுற்றவின்றுற்
றென்பணிவான்குழலாயென்னையோதிருநீற்றுடலி
லென்பணிவான்பெரியானெனவேயண்ணலெண்ணியதே. கஉரு

தோழி தலைவியை முனிதல்.

துன்னித்திலவடமார்பன்மதுரைதுரைவரைவாய்
முன்னித்தகையிற்றெனவறியேனினிமொய்குழலா
யுன்னித்தகையினரோடேயுசாவியுளுற்றுதிநீ
மன்னித்தருளலறனயலாளென்றன்வாய்மொழியே. கஉசா

தலைவி பாங்கியை முனிதல்.

ஓங்கிற்றெழுந்திந்தமாநிலத்தேயுசிதன்மதுரை
வாங்கிவளாந்தநெடுஞ்சென்னையிர்ம்பொழிலவாய்மயலி
னூங்கியிருந்துபுனம்பிரியாதநொதுமலரால்
பாங்கியிரந்துநின்றுளென்றுகூறும்பழிமொழியே. கஉஎ

தலைவி கையுறை யேற்றல்.

புலரச்சொரியுமிலம்பாடடைந்தபுலவர்முக
மலரச்சொரியுங்கொடையான்மதுரைமஞ்சார்சிலம்பிற்
குலவச்சொரியுநறையொடுகொள்ளாவிடினுவணபோ
யலரைச்சொரியுமென்றுற்றருவாயிவ்வருந்தழையே. கஉஅ

இறைவிகையுறை யேற்றமை பாங்கி
யிறைவற்குணர்த்தல்.

தழற்கணிலைந்தவெங்கூர்வேற்சிலம்பதரணிமுற்று
நிழற்கணிவந்தமதுரையங்கோனெடுஞ்சென்னையன்றாள்
சுழற்கணிலொத்திமுலைக்கணில்வைத்துச்சுரிந்தகருங்
குழற்கணியென்னவுங்கொண்டனணீதந்தகொய்தழையே. கஉகூ

பாங்கி தலையகற்துக் குறியிடங் கூறல்.

துணிதிகழ்நெஞ்சத்தருஞ்சிலம்பாதொடைதூங்கிமிர்
திணிதிகழ்மொய்ம்பன்றிருமான்மதுரைத்திண்ணூர்சிலம்பிற்

கணிதிகழ்ஞாங்கரங்காந்தளின்கீழ்மயில்கண்பரப்பும்
பணிதிகழ்சூழ்பளிக்கறையாங்கள்பயிலிடமே. ௧௯௦

பாங்கி குறியிடத்திறைவியைக்கொண்டு சேறல்.

விரைகெழுவேங்கையுங்கொய்துங்கலாபம்விரித்துநின்று
நிரைகெழுமஞ்ஞைகளாடலுங்காண்டுநெடுமதிள்விண்
ணுரைகெழுசென்னைவளநாடுடையுசிதன்மதுரை
வரைகெழுமாநீரருவியுமாடுதும்வாமயிலே. ௧௯௧

பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கல்.

பொருங்கண்ணணங்கனையாய்வேண்மதுரைப்பொருப்பினின
கருங்கண்ணெதிர்ந்துகடும்பகைகாட்டியகாவிமுற்று
மொருங்கண்மிக்கொய்திங்குறுவலிம்மாதவியொண்ணிழற்கீ
ழருங்கண்ணவர்த்திமயிலாடனேக்கியமர்ந்தருளே. ௧௯௨

இறைவி யிறையோனிடத் தெதிர்ப்படுதல்.

விண்டொடுமால்வரைத்திண்டோண்மதுரைவியன்சிலம்பிற்
றண்டொடிருமுகையோடோரலரொடுதாவுமிரு
வண்டொடுதேறல்வழிதொண்டையோடிருமல்லிகைப்பூஞ்
செண்டொடுசிற்கக்கண்டேனொருவாமத்திருவிளக்கே. ௧௯௩

புணர்ச்சியின் மகிழ்தல்.

விண்ணுந்தருவுமனையான்மதுரைவிண்டோய்சிலம்பிற்
பண்ணுந்தகையவிச்செய்கையென்னோவிந்தப்பாவைநல்லாள்
வண்ணந்தருமொர்குமுதம்பொருவுசெவ்வாயமுத
முண்ணுந்தொறுமிக்கினிக்கின்றதாலென்னுடன்முழுதே. ௧௯௪

புகழ்தல்.

தீரன்மொழியிற்றிருமான்மதுரைச்செழுஞ்சிலம்பில்
வாரன்புலவுமயிலனையாய்நின்வனமுலையி
னேரன்பொடுபெற்றிணையாயிருப்பதையெண்ணியன்றே
மாரன்மகுடந்தனைவணங்காச்சென்னிவைத்ததுவே. ௧௯௫

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

விண்ணிவர்கொண்மூவரவோர்ந்துநெஞ்சம்விழைவினொடு
கண்ணிவர்தோகைகளித்தாங்குநின்றன்வரவுகண்டு
தண்ணிவர்மாலைத்தடந்தோண்மதுரைத்தனிச்சிலம்பிற்
பண்ணிவர்தீஞ்சொனல்லாய்களிப்பார்செல்கபாங்கியரே. ௧௯௬

பாங்கி தலைவியைச்சார்ந்து கையுறை காட்டல்.

இழைக்குந்தகையனிறைவன்மதுரையெழில்வரைவாய்
மழைக்கொண்டலன்னவொர்தாழ்குழலாய்கிணைமைவிழிகள்
குழைக்குந்தகைத்திற்புனல்சிக்கிகிற்குங்குவளையிது
தழைக்கும்படித்திருமேனியணையமாந்தண்டளிரோ. கஙஎ

தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

துன்னார்பகைமைதொலைக்கின்றகோன்மதுரைவரையின்
றென்னார்தனியிடம்வைகற்றகைத்தன்றுசேயிழைகேண்
மன்னாரணியதொர்செய்குன்றியற்றிவரையெதிர்கூய்ப்
பொன்னார்வடத்தகல்லூசலுமாடிடப்போதுவமே. கஙஅ

நீங்கித்தலைவற் கோம்படை சாற்றல்.

பண்ணங்குறளிரண்டொன்றுகவாகூபடுத்துறுமவ்
வண்ணந்தகையன்வளர்மான்மதுரைமஞ்சார்சிலம்பிற்
பெண்ணங்கொடியைநின்னோடொன்றுசெய்தவிப்பேதையையுன்
னெண்ணந்தனில்வைத்திருமறவேலெம்மிறையவனே. கஙக

உலகியன் மேன்பட விருந்து விலக்கல்.

ஆயுந்தமிழனடன்மாமதுரையாநங்கன்வெற்பிற்
காயுங்கதிர்லைவேலிறைவாவென்கொல்காயிருவி
வேயுஞ்சிறுகுடில்வைகிறவம்விளர்மிடியோ
டேயுங்கலைக்கறியுண்டவிற்சற்றுமிலையிதமே. கசO

விருந்திறை விரும்பல்.

கடியோடுலவுகவின்றேண்மதுரைக்கடவரைப்பூங்
கொடியோடிகலுமொர்சிற்றிடையாய்நுங்குரம்பையின்வா
யிடியோடயிலுங்கலைமான்பொரியவிறைச்சியன்றே
குடியோடெனக்கதிகொண்டுய்க்குமின்பக்கொழுமமுதே. கசக

பாங்கிற்கூட்ட முற்றிற்று.

ஒருசார்பகற்குறி.

கிழவோன் பிரிந்துழிக்கிழத்தி மாலையம்பொழுது
கண்டிரங்கல்.

பொன்னேடுலவுகையான்மான்மதுரைப்பொருப்பனையா
யின்னேடுலவுநறைமனைகூப்பியெழிற்குவளை

தன்னோடலர்த்தியதைங்கணைக்கேள்வன்கைத்தாமரையை
பொழுதே. கசஉ

பாங்கி புலம்பல்.

நீலப்பெறுமுகிற்கையான்மதுரைநிமிர்சிலம்பிற்
போலைப்பொருவுமென்றோளிபுலம்பவிருள்பரப்பிச்
சேலைப்பெறுகொடியோன்கரத்தாமரையைச்செழிக்கு
மாலைப்பொழுதினுக்கென்னோவிவள்செய்தவல்வினையே. கசங

தலைவனிடத் தலைவி வருந்தல்.

கொடைதருகையன்குணவான்மதுரைக்குளிர்சிலம்பி
னுடைதருமென்மலராவனகொய்துவெள்ளோதிமத்தின்
பெடைதருமென்னடைமேவுமென்னையப்பெரியவெள்ள
மடைதருமுன்னரடைதரகில்லரருந்தகையே. கசச

தலைவியைப் பாங்கி கழறல்.

பரிந்தார்வமுற்றருஞ்சுற்றந்தழுவிப்பல்லாறுதவி
புரிந்தார்மதுரைப்பெருமான்சிலம்பினிற்பூவனையர்
பிரிந்தார்மடவியர்வண்டனையார்பிணையற்புயத்தர்
சுரிந்தார்குழலியென்னோதனிவாடித்துயர்கின்றதே. கசரு

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்.

நறைகமழ்கண்ணியந்தோளனல்லோர்மகிழப்புரக்கு
மிறைவன்மதுரையென்பான்றிண்வரைமிசையில்லைக்கொலாங்
கறைதருவேலொடுமான்றேர்கடாய்முன்கலந்தகள்வர்
குறைபலகண்டுங்கழறுமவரிற்கொடியவரோ. கசசா

பாங்கியோடு பகர்தல்.

மால்கெழுசெல்வன்றென்மாறன்வரோதயன்வாணன்வடி
வேல்கெழுகையன்மதுரையங்கோன்றிண்வியன்சிலம்பர்
பால்கெழுவெவ்விடமிட்டளித்தாங்குமுன்பைம்பொழில்வாய்ச்
சூல்கெழுகார்க்குழலாயின்பளித்தனர்துன்பமிட்டே. கசஎ

பாங்கியச் சுறுத்தல்.

பொலந்தார்புரளும்புயத்தான்மதுரைப்பொருப்பின்முனங்
கலந்தார்பொருட்டுக்கவலுதியேன்முகங்கண்டயிர்த்து
நிலந்தான்பயில்புனங்காக்கப்பிறரைநிறுவிநின்னை
யிலந்தானிருவெனச்செய்யினென்னோசெய்வையீங்குழலே. கசஅ

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.

விண்ணுந்தருவுமனையான்மதுரைவியன்சிலம்பிற்
றண்ணுந்தலங்கலந்தோளருமித்தமியேனுநித்த
முண்ணும்வெண்பாகொடுநீரும்புரையவெள்ளோதிமந்தான்
பண்ணும்படிவந்ததான்முன்னரானபழவினையே. கசகூ

தலைவிக்கவன்வரற் பாங்கி சாற்றல்.

கைந்நின்றமேகத்தடைவாய்நிதிகவினப்பொழியப்
பைந்நின்றகையன்பதியாமதுரைப்பராரைவெற்பில்
வைந்நின்றபூங்கணைவேளனையாரின்றுவந்தனரான்
மைந்நின்றநீள்குழலாய்கேட்டிமான்றேர்மணிக்குரலே. கரு0

சிறைப்புறமாகச் செறிப்பறி வுறுத்தல்.

பூந்தினைகொய்யபுகுந்தனராலெமர்பூவையன்னார்
தேந்தழைகொய்யகிலவாரினியன்பருஞ்சேயமொழின்
மாநதரின்மாலனையான்றமிழ்மாறன்மதுரையெனும்
வேந்தனதீர்ஞ்சுனைகல்லூடுரிஞ்செழில்வெற்பகத்தே. கருக

முன்னிலைப்புறமொழி மொழிந்தறி வுறுத்தல்.

தினைப்பொருட்டாகவுமைக்கடிந்தேமென்றுதேங்கிளிகாள்
வினைப்பொருட்டாகவுறையன்மினீர்விறல்சேர்தொடைய
னனைப்பொருட்டாகநனிவண்டறைநறுந்தோண்மதுரை
தனைப்பொருட்டாமவரையன்பர்மறந்துதரிப்பினுமே. கருஉ

முன்னின்றுணர்த்தல்,

நனைபயில்வேங்கைநறுமலர்பூத்தன்றுநாடெரிப்பாந்
தினைபயில்பூங்கதிர்கொய்தனர்காண்கசெறிப்பமெமர்
வினைபயில்வென்றிக்குடையான்மதுரைவிண்டோய்ந்தவெற்பிற்
சுனைபயில்காவிகள்கொய்தலும்போயதுருமெமக்கே. கருந

முன்னின்றுணர்த்தி யோம்படைசாற்றல்.

இரைந்தார்கடலன்னகல்வியனுற்றவெளியர்தம்மை
விரைந்தாதரிக்குமதுரைவெற்பாமறவேலெமைநீ
கரைந்தாரளிநெடுங்கூந்தனரைத்துக்கவினுடலந்
திரைந்தாலுநின்னையல்லாவிலலைவேறெமர்சிற்றிடைக்கே. கருச

கிழவோன் றஞ்சம்பெறாது நெஞ்சோடு கிளத்தல்.

மன்னிக்குடம்புரைவால்வளையினவயன்முழுதுந்
தென்னித்திலந்திகழ்கோமான்மதுரையஞ்சென்னையன்று

ளுன்னிக்கடவரைவாழுங்குறவருலுத்தர்கரப்
பொன்னிற்கரந்துவைத்தானெஞ்சமென்கொல்புரிகுவமே. கடுரு

ஒருசார்பகற்குறி-முற்றிற்று.

பகற்குறி யிடையீடு.

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

கானக்குறவர்குழீஇநின்றுகூனிக்குயங்கரங்கொண்
டேனற்குரலரிகின்றனராலிருகோட்டொருகைத்
தானக்களிறனையான்மாமதுரைத்தடஞ்சிலம்பா
நானக்குழலியிராளிங்கனைதினைநண்ணுறுமே. கடுசு

இறைவியைக் குறிவரல் விலக்கல்.

பொன்னையிரவலர்க்கார்மழையாங்குபொழிமதுரைச்
சென்னையினையனையாயொன்றுகேணின்றன்செவ்விகண்டு
நின்னையெவனுள்ளிக்கொல்லோவயிர்ப்புறுநீவரலை
யன்னையவனுந்தினம்வருமாலிவ்வகன்புனத்தே. கடுஎ

இறைமகளாடிட நோக்கி யழுங்கல்.

கனிமுத்தமிழ்வளர்ப்போன்மாமதுரைக்கவின்சிலம்பு
மணிமுத்தருவியுஞ்செய்குன்றுமாகிழன்மாதவியுந்
திணிமுத்தலர்வடத்தூசலுமாலினியென்செய்யுங்கொன்
னணிமுத்தமாய்ப்பிரிவார்தெரிவார்தம்மினல்லவரோ. கடுஅ

பாங்கி யாடிடம் விடுத்துக்கொண் டகறல்.

ஆயுங்கலைவல்லவண்ணன்மதுரையினோர்விசும்பு
தோயுஞ்சிலம்பரிவண்வருவாரிந்தத்தோகைநும்மேல்
வாயுமனமும்வைத்தேகினளென்றுவகுத்துனாபின்
னீயுமறவலையாலில்லடைகுதுநீளிதணே. கடுகூ

பின்னுணெடுந்தகை குறிவயினீடு சென்றிரங்கல்.

பயில்காணவேள்வியன்பண்பன்மதுரைப்பராரைவெற்பின்
மயில்காண்மலரளிகாளிந்தமாதவித்தண்ணிழல்வெவ்
வெயில்காணனையவோதமியேனைவிடுத்தரிசே
ரயில்காணிருவிழியாரடையாதங்கமர்ந்தனரோ. கசுo

வறுங்களநாடி மறுகல்.

களிகாண்மனத்தொடுறும்பைஞ்ஞிறத்துக்கவின்சிறைய
ளிகாளுமக்கிவ்வரும்புனந்தந்தகிலேசமன்றே

மளிகாளமாமுகிலன்னான் மதுரைமஞ்சாரசிலமபி
லொளிகாணெடுமிவ்விதனெனக்கீந்தவொருதுயரே. கசுக

துறுந்தொடி வாழுழர்நோக்கி மதிமயங்கல்.

நிதியையுடையவர்துய்க்கும்பயனைநிதியடையா
விதியையுடையவர்வேண்டுமவ்வாறுவியக்குமுயர்
மதியையுடையமதுரையங்கோமான்வரையனையார்
பதியையடையவெனாமுழன்றுபதைப்பதுவே. கசுஉ

பகற்குறியிடையீடு-முற்றிற்று.

இரவுக்குறி.

இறையோ னிரட்குறிவேண்டல்.

வருவிருந்தோம்பலறனென்றவள்ளுவர்வாய்மொழியாற்
றிருவிருந்தென்றுமளிக்குமதுரைச்செழுஞ்சிலம்பிற்
கருவிருந்தெங்குமுகின்மழைசிந்துங்கனையிருள்வா
யொருவிருந்தாய்தொடியீர்வருமோவென்னினுங்களுக்கே. கசுங

பாங்கிநேறியினதருமைகூறல்.

வில்லைப்பயில்கரவேண்மாமதுரைத்திண்வெற்பனைய
மல்லைப்பழகுதனித்தோட்சிலம்பவரலெவனீ
கொலலைக்குறவர்கொடுமரவூர்ந்தெழில்கொண்டுகக்கும்
கல்லைக்கொடுமால்களிறுகடியுங்கனையிருளே. கசுச

இறையோனெறியின தெளிமைகூறல்.

அல்குலரவுமுலைமால்களிறுமருநறவம்
பில்குகுழலிருளுங்கண்டுனைந்தவிப்பேதையென்றே
பல்குநிதியிற்பயில்வோன்மதுரைபபராரைவெற்பின்
மல்குவெருவுரைத்தாயுவைகண்டுமயங்கலனே. கசுரு

பாங்கியவனுட் டணியியல்வினுதல்.

என்னமலாதாழ்குழன்மலர்தேர்ந்தழையென்னதழை
பொன்னவிளமுலைச்சாந்தென்னசாந்துறும்பொய்தலெவண்
மன்னனனையமதியான்மதுரைமஞ்சார்சிலம்பா
வன்னமெனுநடையார்நின்வளநாட்டரிவையர்க்கே. கசுசு

கிழவோனவனுட்டணியியல்வினுதல்.

பொருளாமெந்நாட்டியணியென்னுசாவிற்பொன்னேரளிக்கு
முருளாரிரதமதுரையங்கோனுசிதன்சிலமபி

லருளாயெனக்கணியாந்தழைபாடிடமானவெலலா
மிருளார்கெழுங்குழலாயுங்கணுட்டவியம்புதியே. கசுஎ

அவற்றுத் தன்னுட்டணியியல்பாங்கிசாற்றல்.

மாந்தர்வியக்குமதியான்மதுரைமணிச்சிலம்பிற்
காந்தளம்பூவெங்கருங்குழற்பூசந்தனங்கலந்த
சாந்தமெஞ்சாந்தமெழின்மாந்தழையெந்தழையிறைவா
தேந்தளம்புன்னைநறுநிழலாடுந்திருத்தலமே. கசுஅ

இறைவிக்கிறையோன் குறையறிவுறுத்தல்.

கள்ளார்கருங்குழலாய்நின்னெழின்முகங்காண்பதற்குப்
பள்ளார்தொடைசேர்புயத்தான்மதுரைப்பொருப்பினின்று
தொள்ளாயிரவாகரங்கொண்டுழற்றெரிசுடர்களுக்கும்
விள்ளாநிறைநள்ளிருள்வரக்காதலர்வேண்டினரோ. கசுக

நேராதிறைவி நேர்ந்தோடுகிளத்தல்.

மல்லார்புயத்தன்மதுரையங்கோன்வெற்பர்வம்மினென்று
கல்லார்சிறுநெறிசூருமுலாவருங்கண்மழுக்க
வில்லார்கரத்தினரீட்டியராம்வனவேடரொல்லாஞ்
சொல்லாதிரியுமிருள்கண்டுமெங்ஙனஞ்சொல்லுவதே. கஎ0

நேரிழைபாங்கியோடுநேர்ந்துரைத்தல்.

பொருளைவிருமபியும்போற்றியுமபாராப்புகழுடையா
னருளைவிரும்புமதுரையங்கோன்வெற்பரார்குழலா
மிருளைவிரும்பியிருப்பவராகலினென்னைகொல்லோ
தெருளைவிரும்பியவர்க்கினியாமொன்றுசெப்புவதே. கஎக

நேர்ந்தமைபாங்கிநெடுந்தகைக்குரைத்தல்.

ஏருமருளுநதிகழ்கோன்மதுரைநற்சென்னையன்ன
வாருமணிவடமுஞ்சேரிளமுலைமாட்டுவைகி
யாருமலியிருள்வாய்வரநேராவவண்மனதை
நேருமளவிரந்தேன்கமழ்திண்டோணெடுந்தகையே. கஎஉ

குறியிடைநிறீஇத்தாய்துயிலறிதல்.

அடித்துப்பறியப்பகைதொலைப்போன்மதுரைமுதுநூல்
படித்துப்பழகுமவன்வரைவாய்நறும்பைந்தழைக
ளொடித்துக்கொணருங்கறையடிவேழமங்குற்றதுகொல்
லடித்துச்சிறகிளமஞ்ஞைநரல்கின்றவாரணங்கே. கஎங

இறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தல்.

உன்னித்தனையடைந்தோரையளிக்குமுயர்புகழே
மன்னிப்பெறுமாமதுரைமைதோய்வரைவாயிருட்கு
மின்னிக்கதிர்செய்நெடுவேல்விளக்கின்மிகைப்பவந்தார்
கன்னிக்கருங்குழலாய்புன்னைநாங்கர்நங்காதலரே. கஎச

அவட்கொண்டுசேறல்.

பொருங்கண்ணிசூடிப்புகுமாற்றலரைப்பொருதழித்த
மருங்கண்ணிவந்தமதுரையங்கோன்வரைவாய்விரைநின்
கருங்கண்ணினின்றகுவளையுங்கொய்துகதிர்நகையின்
வருங்கண்ணிமுல்லையுஞ்சூடுவனீர்ங்குழன்மாமயிலே. கஎரு

துறியுய்த்தகறல்.

இறைநீர்மையனடன்மாவனையானல்லியலுடைய
கிறைநீர்மதுரையஞ்சென்னையன்றூய்கிமிர்பூம்பொழில்சேர்
சிறைநீர்த்தடம்பொய்கைவாய்விரியாம்பல்கொய்தோர்சிறக்கும்
பொறைநீர்நின்னீர்ங்குழல்வேய்வனிங்கேநிற்கபுக்குவனே. கஎசு

வண்டுறைதாரோன்வந்தேதீர்ப்படுதல்.

சீமான்விறல்சேர்திருமான்மதுரைச்செழுஞ்சிலம்பில்
வாமாண்கதிரினைக்காணுவிக்கங்குலின்வாய்வருமென்
னுமானனிகொல்லோவன்றேலினிப்பின்னையார்திறப்பார்
